
# திருக்கோயில்

ஏப்ரல் 1991 விலை ரூ. 3





சிக்கல் அருள்மிகு நவநீதேசுவரர் ஆலயத்தில் திருக்கோயில் அங்காடிகளை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.



அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் ஆலயத்தில் நடைபெற்ற விஷ்ணு சகஸ்ரநாம வேள்வியில் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டார்கள்.

முகப்பு:

சென்னை, திருவேற்காடு

அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை 34 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு சித்திரை<br>ஏப்ரல் 1991 விலை ரூ. 3-00 | மணி : 4 |
|---|---|---|

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## பொருளடக்கம்

கர்நாடக சங்கீதத்தின் ஆதிமும்மூர்த்திகள்
—ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்.

வேதமும் ஆகமமும்
—திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

பங்குனி உத்திரத் திருநாள் —சி. வசந்தி

விவேகானந்தரின் பொன்மொழிக் குறள்கள்
—கி. பழநியப்பனார்

விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான் —கோ. சண்முகம்

நித்தம் வணங்கிடுவோமே
—மா. கோபாலன் எம்.ஏ.

சோழநாட்டு வைணவத் திருத்தலங்கள்
—நித்திலக்கோ

அப்பரடிகளின் அருள்மொழி
—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
—வே. தியாகராஜன்

சித்திரபாரதம் —செவ்வேள்

# கர்நாடக சங்கீதத்தின் ஆதிமும்மூர்த்திகள்

ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,

நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த திருஞான சம்பந்தர் திருஅவதாரம் புரிந்த சீர்காழித் திருத்தலத்தில் கொண்டாடப் பெறும் தமிழிசை விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

உயர்ந்த பொருள்களை மூன்றெனும் எண்ணிக்கையில் அடக்கிக் கூறுவது நம் செந்தமிழ் மொழியில் ஒரு சிறந்த மரபு. மா, பலா, வாழை எனக் கனிகள் மூன்று, சூரியன், சந்திரன், அக்கினி என சுடர்கள் மூன்று, மண், பெண், பொன் என ஆசை மூன்று; பதி, பசு, பாசம் என நம் சைவ சித்தாந்தம் உணர்த்தும் உண்மைப் பொருள்கள் மூன்று. இவை போலவே இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என நம் தமிழ்மொழியும் முத்தமிழாக மிகப் பழங்காலத்திலேயேசிறப்புற்றிருந்ததைத் தொல்காப்பியமும், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, திருக்குறள் முதலான சங்கநூல்களும், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலான பழந் தமிழ்க் காவியங்களும் தெளிவுபடுத்துகின்றன.

இசைத்தமிழ்க் கருவூலமான சிலப்பதிகாரக் காவியத்திற்கு உரை செய்த அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் எத்தனையோ மிகச் சிறந்த இசை நூல்கள் சிலப்பதிகார காலத்தில் வழங்கியிருந்து நம் நல்வினையின்மையால், கடல்கோளால் மறைந்துபட்ட செய்திகளைக் கூறிடக்காண்கிறோம். ''பரதம், அகத்தியம் முதலாக உள்ள தொன்னூல்கள் இறந்தன'' என்று உரையெழுதுகிறார் அடியார்க்கு நல்லார்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இச்சிறப்பு மிகு சீர்காழித் திருத்தலத்தில் தோன்றும் திருஞான சம்பந்தர்தான் தமிழிசையால் ஒரு பெரும் புரட்சி செய்கிறார். தாம் வாழ்ந்திருந்த 16 வயதிற்குள் தமிழகம் முழுவதும் வலம் வந்து தமிழையும், சைவசமயத்தையும் காப்பதற்காக அவர் அரும்பாடுபடுகிறார். தம்முடன் யாழிசைப்பதில் வல்லவரான திருநீலகண்டயாழ்ப்பாணரையும் அவர்தம் துணைவியார் மதங்கசூளா மணியாரையும் அழைத்துக் கொண்டு திருத்தலங்கள் யாவும் சென்று புதுப்புதுப் பண்களில் இறைவனைப் போற்றிப் பாடுகிறார். எங்கெங்கு நல்ல இசைக்கருவிகளுடன் தமிழ்இசை சிறப்பாக இசைக்கப்படுகிறதோ அங்கு இறைவன் இருக்கிறான். இசை இருக்குமிடமே இறைவன் இருக்



ஆணையாளர் வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,

கும் இடம் என்பது திருஞான சம்பந்தர் கருத்தாகும். ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித்' திருமுறைகளை ஓதி உருக வேண்டும் என்று நமக்குக் கற்பித்த ஞானமூர்த்தி திருஞான சம்பந்தர்தான்.

அதனால்தான் அவரை சுந்தரமூர்த்தி நாயனார்

''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந்தன்''

என்ற போற்றுகிறார். அடியார்களின் பெருமை போற்ற வந்த சேக்கிழார் பெருமானும் இசையின் வடிவமே திருஞான சம்பந்தர்தான் என்பதை மிக அழகாக

''ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றை
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்''

என்று போற்றிப் புகழ்ந்திடக் காண்கிறோம்.

ஆகவே சீர்காழித் திருத்தலத்தைத் தமிழிசையின் அவதாரத் தலம் என்று கூட நாம் போற்றிப் புகழலாம். சீர்காழித் திருத்தலத்திலேதான் அன்றைக்கு கானத்தின் எழுபிறப்பாகத் திகழ்ந்த திருஞான சம்பந்தர் திருஅவதாரம் புரிந்து அரிய திருத்தொண்டினைப் புரிந்துள்ளார். இன்றைக்கு நாம் இங்கே


*சீர்காழியில் நடைபெற்ற தமிழிசை விழாவில் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஆற்றிய உரை மகிழ்வுடன் வெளியிடப்படுகிறது.*

# வேதமும் ஆகமமும்

## திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

மக்கள் ஐம்பொறிகளின் இயக்கத்திற்கு ஆட்பட்டு இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். எங்கும் எப்போதும் சிற்றின்பத்தையே நாடுகின்றனர். நாதம் என்னும் ஒலி இறைவனுடைய புகழை பரவச் செய்ய அமைந்துள்ள ஒன்றாகும். கூத்தும் ஆட்டமும் இறைவனின் தன்மையை மக்கள் கண்முன்னே நிறுத்துவதற்கான சாதனங்களாகும். கணிகையர்கள் பாடலையும் ஆடலையும் பரப்பி மக்களை உலக இயலில் அழுந்தச் செய்கின்றார்கள். மேல் நிலைக்குச் செல்ல வேண்டுமென்கின்ற விருப்பம் உள்ளவர்கள் கூட உலக ரசனைகளில் ஈடுபடும் அளவுக்கு இந்தப் பாடலும் ஆடலும் அவர்களை அழைத்துச் செல்கின்றன.



திருமந்திரச் செம்மல்
டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

பரம்பொருளை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் மனதை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்கின்ற கட்டுப்பாட்டுடன் தோற்றத்தில் மயங்கிக் கெடாமல், அலைந்து திரியாமல் இருக்க வேண்டும். மக்கள் சாதாரணமாக பொருளை ஈட்டும் முயற்சியில் ஈடுபடுவர். வேதங்கள் மெய்ப்பொருளை ஈட்டுவதற்கான இடமாகும். அந்த இடத்திற்குச் செல்ல விரும்புபவர்கள் உலகக் கொள்கைகளை மறந்து வேதங்கள் கூறுகின்ற ஒழுக்கத்தையும் சீலத்தையும் பேண வேண்டும். அவ்வாறு செய்யாமல் வெறுமனே வேதத்தைப் படிப்பதால் மட்டும் நாம் விரும்பும் பயன் கிட்டாது.

''பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியில் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரத மில்லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலலுற் றாரே''.

(திருமந்திரம்..56)

ஆகவே, வேதத்தின் முடிந்த பொருள் வேட்கையற்ற நிலையாகும். வேதாந்த நிலையில் சீவன் இடைவிடாது சிவனோடு பொருந்தி நிற்கின்றது. புலன் வகைகள் தத்தம் பணியினை சிவத்தோடு இணைத்துக்கொள்கின்றன. சீவ கரணங்கள் சிவகரணங்களாகின்றன. வேதத்தின் முடிவை உணர்ந்த பெரியோர்கள் உலகப் பற்றினை நீக்கி நிற்கின்றார்கள். அவ்வாறு நிற்பவர்களே வேதாந்தத்தின் முழுப் பொருளைத் தமக்குள் கண்டவர்கள். ஆசையை விடாமல் வேதாந்தத்தைக் கேட்பவர்கள் அதன் உண்மையை உணரமாட்டார்கள்.

''வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட்டாரே''

வேதங்கள் பொது, ஆகமங்கள் சிறப்பு. வேதங்களின் முடிவு வேதாந்தம். சிவாகமங்களின் முடிவு சித்தாந்தம். ஆகமங்கள் என்றால் இறைவனை அணுகுதல் என்பதாகும். மெய்ப்பொருளை உணர்த்துவது ஆகமம். அதை அணுகுவதற்கான பாதைகளைத் தெளிவாக்குவதும் ஆகமம். பதிக்கும் பசுவுக்கும் இடையே நிற்கும் மும்மலங்களான பாசத்தை அகற்றுவதற்காக தகுந்த வழிகளைக் காட்டி, பதியாகிய இறைவனை உயிரானது அணுகுவதற்கான முறைகளை நமக்குக் கற்பிப்பது ஆகமம்.

பேரறிவு உடைய சிவமானது ஞானமயமானது, ஆனந்தமயமானது. உயிர்களோ பாசங்களால் கட்டுப்பட்டுள்ளன. பாசம் உயிர்களுக்கு அறியாமையைக் கொடுக்கின்றது.

பாசத்தோடு சம்பந்தப்பட்ட உயிரானது அறியாமையில் மயங்கிப் பதியை உணர்ந்துகொள்ளும் திறத்தினை இழந்து நிற்கின்றது. அந்தத் திறத்தினை மீண்டும் உயிரானது பெறச் செய்வது இறைவனுடைய அருளாகும். அந்த அருளின் காரணமாக உலகம் தோற்றப்பட்டு தனு, கரண, புவன போகங்கள் உருவாகி அவற்றை உயிரானது பயன்படுத்துவதற்காக இறைவனுடைய ஐந்தொழில் இயக்கம் நடைபெறுகின்றது. அந்த இயக்கத்தில் உயிர் படிப்படியாக முதிர்வு பெற்று இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஓர் நிலையை அடையச் செய்வதற்கான வழிகளை ஆகமங்கள் கற்பிக்கின்றன.

ஆகவே, ஆகமங்களில் நமக்குக் கிடைக்கும் பொருள்கள் மெய்ப்பொருளை உணர வேட்கையைக் கொடுத்து, அந்த வேட்கையை திருப்திசெய்ய வழிகளையும் காண்பிக்கின்றன. எனவேதான் வேதங்கள் பொது என்றும், ஆகமங்கள் சிறப்பு என்றும் கூறப்பட்டன. வேதங்களும் ஆகமங்களும் மெய்ப்பொருளை உணர்த்தும் இறைவன்நூல்என்றும், நாதன்உரை என்றும் திருமூலர் அழைக்கின்றார். இவ்விரண்டையும் முழுமையாக நாடினால் இறைவன் என்றும், உயிர் என்றும் இரண்டாக நினைக்கும் நினைப்புகளும், வேறுபாடுகளும் மறைந்து, மனமானது இறை அமைதியில் லயிக்கும். இதை உணராதவர்களுக்கு தான் என்றும், நான் என்றும் இரண்டு பிரிவுகள் கண்முன் நின்று மாயையின் காரணமாக அவர்களை ஆட்டிப் படைக்கும். வேறுபட்ட காட்சியினை நிறுத்தி, ஒன்றுபட்ட காட்சியை நமக்கு அளிப்பது வேதங்களும், ஆகமங்களும் என திருமூலர் கூறுகின்றார்.

''வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே''
(திருமந்திரம்.. 2397)

இதையே சிவஞானசித்தி பின்வருமாறு விளக்கித் தருகின்றது.


''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுமுள நூல் இவற்றின்விரிந்த நூல்கள்
ஆதிநூல், அனாதிஅம லன்தருநூல் இரண்டும்;
ஆரணநூல்பொது; சைவம் அருச்சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும், சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது; நின்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம்; பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்''

வேதம் இலட்சியம். ஆகமம் இலக்கணமாகும். வேதம் மெய்ப்பொருளை அறிவிக்கின்றது. ஆகமம் அவை அடைவதற்கான இலக்கணத்தையும், சாதனங்களையும், பயன்களையும் கூறுகிறது. பொது நூல் உண்மையை உணர்த்தும். சிறப்பு நூல் அதற்கான வழிகளைக் காட்டும். வேதம் நிலமெனவும், ஆகமம் அதில் விளைந்த மரம் எனவும் சொல்லப்படுகிறது. மாறாக, வேதத்தை மரம் எனவும் ஆகமத்தை அதில் விளைந்த பழுத்த கனி எனவும் சான்றோர்கள் கருத்து தெரிவிப்பார்கள்.

உயிர்களுக்கு இறைவன் இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறிக் கொடுத்து உயிர்கள் அவற்றை அனுபவிக்க வைக்கின்றான். இயற்கையில் மழையும், கோடையும் மாறி மாறி வருவது போல உயிர்களுக்கு ஏற்றமும் இறக்கமும் ஒன்றன் பின் ஒன்றான வந்துகொண்டிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் காரணமாக இருப்பது உயிரைக் கட்டும் மும்மலங்களாகும். எப்பொழுது உயிர்கள் தோன்றினவோ அப்போதே உயிர்களைப் பந்திக்கும் பாசமும் உருவாகியது. ஊழிக்காலம் வரும்பொழுது உயிர்களெல்லாம் இறைவனிடம் ஒடுங்குகின்றன. உடல்களெல்லாம் மறைகின்றன. பிரபஞ்சத்தின் பொருள்களும் மறைகின்றன. தங்கி நிற்பது பேரறிவும் பேராற்றலும் மிக்க இறைவன் மட்டும்தான். அவனே எல்லாவற்றிற்கும் கடையாகவும், முதலாகவும் நிற்கின்றான். மக்களுடைய வினைப்பயனைத் தீர்க்கும் அதே இறைவன், வினைகள் மீண்டும் உருவாக காரணமாகின்றான். உயிர்களெல்லாம் இறைவனிடம் ஒடுங்கி நிற்கும்பொழுது, மீண்டும் படைப்பு என்கின்ற பணியைத் தொடங்க வேண்டும். அதன் வழியாக உயிர்கள் அனுபவங்களைப் பெற்று மெய்யுணர்வினை அடைய வேண்டும். அதற்கான வழிகளை இறைவி இறைவனிடம் கேட்க, சிவபெருமான் வேதங்களையும், ஆகமங்களையும் உமாதேவியாருக்கு உலகம் உய்ய திருவருள் செய்தான் என்று திருமந்திரம் கூறுகின்றது.

''மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும் உடனே சொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே''
(திருமந்திரம்...65)

மொழி எண்ணங்களை வெளிப்படுத்தப் பயன்படுகின்றது. மொழிக்கு அப்பாற்பட்ட உணர்வுகளை மட்டும் கொண்ட நிலையும் உண்டு. அதற்கும் அப்பால் மொழியற்ற, முற்றிலும் உணர்ந்த சூட்சமமான அமைதி நிலையும் உண்டு. மொழிகளது நிலை நான்கு வகைப்படும். அவை முறையே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைக்கரி எனப்படும். இறைவனிடமிருந்து முதலில் ஆகமங்களைக் கேட்டவர்கள் சூக்கும நிலையில் அவற்றைப் பெற்றார்கள். பின்னர் பைசாந்தி, மத்திமை என்கின்ற நுண்ணிய நிலையில் வேறு சிலர் பெற்றார்கள். அவர்களிடமிருந்து ஆகமங்களை இவ்வுலகில் வாழும் மக்கள் வைக்கரி என்னும் பேசப்படும் மொழியாகிய பருமொழியினால் பெற்றார்கள். ஆகவே, இறைவன் பெருங்கருணையோடு அருளிய இந்த இருபத்தெட்டு ஆகமங்களுள் திருமூலருடைய குருவான நந்திபிரான் ஒன்பது ஆகமங்களை கற்றுணர்ந்தார் என்பதை ''நவஆகமம் எங்கள் நந்திபெற்றானே'' என்று திருமூலர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். நந்திபெருமானிடம் ஒன்பது ஆகமங்களையும் கேட்டு உலகுக்கு உணர்த்தியவர்கள் எட்டு பேர்கள் என்றும்,



# ஞானியின் மாண்பு

''எவன் பிறன் மனைவியைத் தாய்க்குச் சமமாகவும், பிறர் பொருளை மண்ணுக்குச் சமமாகவும், உலகிலுள்ள எல்லா உயிர்களிடமும் தன்னையே காண்கின்றானோ அவனே சிறந்த ஞானியாக ஆகின்றான்.

*—இராமகிருஷ்ண பரமஹம்சர்*

அவர்களில் தானும் ஒருவன் என்பதும் திருமூலர் திருவாக்காகும். இவரைத் தவிர அவ்வாறு ஆகமங்களைக் கேட்டவர்கள் நான்கு நந்திகள், சிவயோக மாமுனிவர், பதஞ்சலி, வியாக்கிரமர் ஆவார்கள். இந்த ஒன்பது ஆகமங்கள் எவை என்று திருமூலர் பின்வரும் திருப்பாட்டில் புலப்படுத்துகின்றார்:

''பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்ற நல் வீரம் உயர்சிந்தியம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே''.
(திருமந்திரம்..63)

அதாவது இருபத்தெட்டு ஆகமங்களில் காரணம், காமிகம், சிந்தியம், சுப்பிரம் என்னும் சிவபேத ஆகமங்கள், மற்றும் வீரம், வாதுளம், காலோத்தரம், மகுடம் என்னும் ருத்திரபேத ஆகமங்கள், மற்றும் வியாமளம் என்னும் தந்திர சாத்திரம் திருமந்திரத்திற்கு அடிப்படையாக அமைவது என்று கூறுவர். காலோத்தரம் என்பது மூல ஆகமம் இல்லையென்றும் கூறப்படுகின்றது. மேலும், வியாமளம் என்பது தந்திர சாத்திரமாகையால் அதைத் திருமூலர் குறிப்பிட்டிருக்கமாட்டார் என்றும் ஓர் கருத்து நிலவுகின்றது. எனவே, மேற்கூறிய திருப்பாட்டில் உள்ள மூன்றாவது அடியில் வரும் வியாமளம், காலோத்திரம் என்பவை பிற்காலத்தில் வேறொருவர் புகுத்தினார் என்ற கருத்தும் நிலவுகிறது.

திருமந்திரமாலை ஒன்பது தந்திரங்களை கொண்டது. திருமூல நாயனார் ''நாள்தொறும் சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேன்'' என்கிறார். இந்நூலில் உள்ள ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் சாரம் என்று சொல்லப்படுகின்றது. ஆனாலும், திருமூலர் ஒவ்வொரு ஆகமத்தையும், ஒவ்வொரு தந்திரமாக செய்தார் என்று கூறுவதற்கு இல்லை. எல்லா ஆகமங்களும், எல்லாப் பொருளையும் பலவாறாகக் கூறுகின்றன. தனித்தனியாக அவை தனித்தனிப் பொருளை எடுத்துக் கூறவில்லை. சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றை விரித்தும் எடுத்துக் கூறுகின்றன. ''சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே'' என்று திருமூலர் கூறும்போது நந்திபெருமான் அவருக்குச் சிறப்பாக உணர்த்திய ஆகம அறிவின்சாரத்தை திருமந்திர மாலையாக அருளிச் செய்தார் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். முற்றிலும் உணர்ந்த யோகியார் தான் கற்று அனுபவித்த உண்மையை ஒன்பது பகுதிகளாக பிரித்துக் கூறும்பொழுது, ஆகமங்களின் சுருக்கத்தை அவர் தருகின்றார் என்றவாறு எடுத்துக்கொள்ளக் கூடாது.

ஆகமங்கள் இறைவனை நமக்கு உணர்த்துகின்றன. பதி, பசு, பாசம் ஆகியவற்றின் இயல்புகளை அறிவிக்கின்றன. ஐம்பூதங்களால் ஆகிய உடலானது உயிரினுடைய இருப்பிடமாக இருக்கின்றது. உடல் சடப்பொருளாகும். பிற பொருள்கள் அறியும் தன்மையற்றது. உயிர்கள் குறைந்த அறிவைக் கொண்டவை. துணையின்றி அறியும் திறமை அவற்றிற்குக் கிடையாது. இறைவனோ பேரறிவாளன். அந்தப் பேரறிவு உயிர்களிடம் திரும்பும்பொழுது உயிர்கள் ஞானக்கண்ணால் பார்க்கத் தொடங்குகின்றன. அதுவே இறைவனுடைய அருளாகும். ஆனால், அந்த அருளைப் பெறும்வரை உயிர்கள் பாசத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால், அறியாமை நிலையில் மூழ்கி நிற்கின்றன. மாயையிலிருந்து தோன்றிய உடலும், உட்கருவிகளும் உயிர்களுக்கு உலக அனுபவத்தைச் சேர்த்து, உண்மை அறிவினை மறைத்து வைக்கின்றன. இவை எல்லாமும் இறைவனுடைய செயலாகும். உயிர்களுக்கு அனுபவத்தைக் கொடுத்து, அறிவினைப் பெருக்கி, பேரின்ப வடிவான மெய்ப்பொருளுடன் கலந்துகொள்ளும் வாய்ப்பை அளிப்பதும் இறைவனே ஆகும். அந்த அனுபவத்தின் அடிப்படையில் ஒவ்வொரு உயிரும் பல பிறப்புகள், இறப்புகள்

கொண்ட பாதையில் பிரயாணம் செய்து, இறைவன் அருளால் பக்குவத்தைப் பெறுகின்றன. முதிர்ந்த நிலையை அடைவதற்கான சிறப்பு வழிகளை உயிர்கள் மேற்கொள்வதன் காரணமாகத்தான் பேரறிவின் அனுபவத்தைப் பெற முடியும். தக்க நேரத்தில், தக்க நிலையில் உயிர்களின் வினைக்கேற்ப ஞான ஒளியை அவைகளுக்குத் தருவதற்கான குரு ஒருவன் தோன்றுகின்றான். உயிர் அந்த குருவினை நாடிச் சேருகிறது. இந்தச் சேர்க்கையும் இறைவனுடைய அருளினால் நடைபெறுகிறது. படைத்தல், காத்தல், மறைத்தல் போன்ற தொழில்களைச் செய்யும் இறைவன் உயிர்களுக்குத் தக்க நேரத்தில் தனது அருளினைக் காட்டி அவைகளுடைய அகக்கண்களை விழிப்பிக்கின்றான். கன்மத்தின் காரணமாக உயிர்கள் பல்வேறு செய்கைகளையும் புரிவது அவைகளை உய்விப்பதற்காகவே என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். சரியை, கிரியை, யோகம் போன்ற மார்க்கங்களில் உயிர்களை இறைவன் தக்க நேரத்தில் செலுத்தி அவைகளுக்கு பரஞானத்தை அருளிச் செய்கின்றான். உயிரானது மலம் ஒழிந்து, தூய்மை பெற்று தனது இயல்பினை முற்றிலும் தெரிந்துகொண்டு இறைவனை அடையும் பல வழிகளை ஆகமங்கள் விளக்கியுள்ளன.

''அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே''.

(திருமந்திரம்...66)

புவியில் வாழும் மக்கள் மெய்ப்பொருளை உணர்ந்துகொள்ள பரு மொழிகளைப் படைத்தான் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

சிவபெருமானுக்கு நாற்றிசை நோக்கி நான்கு முகங்கள் உண்டு. வானை நோக்கி ஒரு முகம். ஆகமொத்தம் ஐந்து முகங்கள் உண்டு. அவை முறையே சத்தியோசாதம் (மேற்கு), வாமதேவம் (வடக்கு), அகோரம்(தெற்கு) தற்புருடம் (கிழக்கு) ஈசானம் (உச்சி) எனப்படும். இறைவன் நான்கு வேதங்களை கீழ் உள்ள நான்கு முகங்களாலும், ஆகமங்களை மேலே உள்ள ஈசான முகத்தாலும் அருளிச் செய்தான் என்பதை திருமூல நாயனார் 'அஞ்சா முகத்தில் அரும் பொருள் கேட்டதே' என்கிறார்.

மேலும், சிவபெருமான் எல்லாவற்றிற்கும் மேலான நிலையில் பரம்பொருளாக இருந்து, பின்னர் பரசிவமாகி தன்னிடத்திலிருந்து வெளிப்பட்டு வந்து தத்துவம் என்கின்ற நிலையில் இருக்கும் சத்திக்கு உணர்த்தியதாக திருமூலநாயனார் கூறுகின்றார். இச்சக்தி தன்னிடமிருந்து வெளிப்பட்ட சதாசிவத்திற்கு உணர்த்தினாள். சதாசிவம் தன்னிடத்திலிருந்து தோன்றிய மகேசுவரருக்கும், அவர் ருத்திர தேவனுக்கும், அவர் திருமாலுக்கும், திருமால் பிரம்மனுக்கும் உணர்த்த, இவ்வாறு ஆகமங்கள் பரம்பொருளிடமிருந்து வெளிவந்து வெவ்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற தேவர்கள் வழியாக மக்கள் பயனடையும் வகையில் நந்திப் பெருமானுக்கு மெய்யுணர்வாக வழங்கப்பட்டது என்று திருமூலர் கூறுகின்றார். அத்தகைய ஆகமங்கள் சிவதன்மமாகிய சிவபுண்ணியத்தை வழங்குவதாக திருமூலர் கூறுகின்றார்.

''சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில் தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே''.

(திருமந்திரம்....62)

இதனை மாணிக்கவாசகப் பெருமான்

''மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்''

என்று கூறுகின்றார். ''ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க'' எனவும் வாழ்த்துகின்றார்.


ஆகமங்களை இறைவன் உமாதேவிக்கு அறிவித்தான் என்பதை பெரியபுராணம் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

''வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுதே
தெள்ளும் வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ள வாறுகேட் டருளினாள் உலகை ஆளுடையாள்''

ஆகமங்களை மூல ஆகமங்கள் என்றும், உபாகமங்கள் என்றும் இரு பிரிவுகளாக பெரியோர்கள் வைத்துள்ளனர். மூல ஆகமங்கள் இருபத்தெட்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளன. மூல ஆகமங்கள் சிவபேதம் என்றும், ருத்திர பேதம் என்றும் இரு பிரிவுகளாக உள்ளன. சிவபேதம் பத்தும், ருத்திர பேதம் பதினெட்டும் ஆகும். இவ்விரு வகை ஆகமங்களையும் உபதேசித்தவர் சிவபெருமான் ஒருவரே. சிவ பேதமாகிய பத்து ஆகமங்களுள் ஒவ்வொன்றையும் மும்மூன்று பேர்களாக சிவபெருமானிடமிருந்து நேராகக் கேட்டனர். ருத்திரப் பேதமாகிய ஆகமங்கள் ஒவ்வொன்றினையும் இரண்டு இரண்டு பேர்கள் பெற்றார்கள். ஆக சிவபெருமானிடமிருந்து நேராக ஆகமங்களைக் கேட்டவர்களுடைய எண்ணிக்கை அறுபத்தாறு ஆகும். இவர்கள் இறைவனை வணங்கி அவனுடைய மேன்முகமாகிய ஈசான முகத்தினிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். இதைத் திருமூலர் ''அஞ்சலிக் கூப்பி அறுபத்தருவரும் அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே'' என்பார்.

இருபத்தெட்டு மூல ஆகமங்களுடன் இருநூற்றி ஏழு உபாகமங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்படுகிறது. உண்மையில் இருபத்தெட்டு மூல ஆகமங்கள் என்கிற அளவில் இல்லாமல் அளவின்றி இருந்தன என்பதை திருமூலர் ''எண்ணில் இருபத்தெண்கோடி நூறாயிரம்'' என்றும், ''எண்ணிலி கோடி'' என்றும், ''எழுபது கோடி நூறாயிரம்'' என்றும் குறிப்பிடுகின்றார். இந்த எண்ணிக்கைகள் ஆகமங்கள் எழுதப்பட்ட கிரந்தங்களின் அளவு என்றும் எடுத்துக்கொள்ளலாம். இவற்றில் பல மறைந்துவிட்டன. இன்று நமக்குக் கிடைப்பவை மிகவும் குறைவே.

— — —



# கந்தவேள் கருணை

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

## [39]

அவ்வடிவம் ஆகாயத்துக்குச் சென்றது. நீலன் அதனைப் பின் தொடர்ந்து சென்றான். அந்த உருவம் மறைந்தது. இப்படியாக, அந்த உருவம் விண்ணில் செல்லும்; மண்ணில் வரும்; சேய்மையதாகும். அண்மையதாகும்: முன்னே வரும் பின்னே வரும். பலவுருவாகும். நீலன் சற்றுத் திகைத்தான். கடைசியில் 'இது மாயமே' என்று உணர்ந்தான். இதற்குள் பூமியில் விழுந்து கிடந்த இரணியன் அயர்வு நீங்கி எழுந்தான். நீலன்மீது தீக்கணைகளை விடுத்து உடம்பைத் தொளைத்தான். நீலன் சலித்துத் திகைத்து வருந்தினான்.

இரணியனின் மாயத்தைக் கண்ட வீர வாகுதேவர் சினங்கொண்டார். முருகப் பெருமானை தியானித்துத் தேரை செலுத்திக் கொண்டு இரணியன் முன்பு வந்து ஞானப் படையை விடுத்தார். அதனால் இரணியனின் மாயை அழிந்தது. இருவருக்கும் உக்கிரமான போர் நடந்தது.

இரணியனின் வில், தேர், வச்சிர கவசம், சேனைகள் எல்லாம் அழிந்தன.

இந்நிலையில் அறிவாளியான இரணியன் யோசித்தான். ''சிற்றப்பா தாரகன் அழிந்து விட்டார்; தந்தையான சூரபன்மனும் அழியப் போகிறார். எல்லோரும் இறந்துவிட்டால் பிதுர்க்களுக்குச் செய்ய வேண்டிய தீக்கடனும், நீர்க்கடனும் செய்வது யார்? அதற்கு ஓர் ஆள் இருக்க வேண்டாமா?' என்று எண்ணினான்.

> ''மைந்தனைப் பெறு கின்றதும் மாசிலாப்
> புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
> தந்தை மாண்டுழித் தம் முறைக் கேற்றிட
> அந்தமில் கடன் ஆற்றுதற் கேயன்றோ?''

''தாய் தந்தையர் நம்மைப் பெற்று வளர்த்ததெல்லாம் கடைசிக் காலத்தில் கடன் ஆற்றுவதற்காக அல்லவா? ஆயிரத்தெட்டு யுகங்கள் வாழ்ந்த தந்தை இறந்துவிட்டால் எள்ளும் தண்ணீரும் இறைப்பது யார்?'' என்று எண்ணிய இரணியன் திடீரென்று மறைந்து கடலில் மீனாகப் போய்விட்டான்.

வீரவாகுத்தேவர் வெற்றிச் சங்கை ஊதினார். அவர் நினைத்தால் கடலை வற்றச் செய்து பாணம் விட்டு இரணியனைக் கொன்றிருக்கலாம். ஆனால் உயிருக்கு பயந்து மீனாகப் போனவனைக் கொல்லுவது ஆண்மையல்ல என்று விட்டுவிட்டார்.

போருக்கு ஆற்றாது இரணியன் கடலில் மறைந்த செய்தியை ஒற்றர்கள் சூரபன்மனிடம் சென்று தெரிவித்தனர். அதைக் கேட்ட சூரபன்மன் மனம் குன்றி நாணமடைந்தான். எவருடனும் பேசவே அந்த மாவீரனுக்கு வாய் எழவில்லை. அத்தருணம் அவன் மைந்தனாகிய அக்கினிமுகன் அவனிடம் வந்தான்.

அக்கினிமுகன் திக்குப் பாலர்களையும், சூரியன் தேரையும் திக்கஜங்களையும்வாட்டியவன். தாய்வயிற்றில் இருக்கும்போதே நெருப்பைக் கக்கியவன், சந்திரனைச் சிறைசெய்தவன், அரியும் அயனும் ஊரும் கருடனையும் அன்னத்தையும் பிடித்து விளையாடியவன்.

''அப்பா! தூதாக வந்த வீரவாகு அவ்வளவு வலிமையுள்ளவனா? இதோ அவனையும் அவனுடன் வந்துள்ள சேனைகளையும் வென்று வருகிறேன். விடை தாருங்கள்'' என்று சூரனை உத்தரவு கேட்டான் அக்கினிமுகன். சூரபன்மன் அவனுக்கு விடைதந்து அனுப்பினான்.

பாட்டியாகிய மாயை கொடுத்த வில்லையும் தெய்வாஸ்திரங்களையும் எடுத்துக். கொண்டு தேரில் ஏறிப் புறப்பட்டான் அக்கினிமுகன்.


யுத்தகளத்தில் பூதசேனைகளும் அவுணர்களும் கடும்போர் செய்தார்கள்.

நவவீரர்களில் ஒருவராகிய வீரபுரந்தரர் ஊழித்தீயைப் போல் உருத்து, வில்லை

வளைத்து அவுணர்களின் தேர்களைஅழித்தார். அவுண சேனாதிபதியாகிய சோம கண்டனின் தலையை அறுத்தார்; அக்கினிமுகனுக்குஉயிர்த் துணைவனாக நின்ற மேகனையும் கொன்றார். அக்கினிமுகன் தானே நேரில் அவரை எதிர்த்துக் கணை மழை பொழிந்தான். அவருடைய தேரையும் வில்லையும் உடைத்து நூறு பாணங்களால் மார்பைத் துளைத்தான். அவுணர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

வீரபுரந்தரரின் வலிமை அழிந்ததைக்கண்ட அவரது துணைவர்களான நவவீரருள் வீரவாகு தவிர ஏனைய எழுவரும் அக்கினிமுகனை வளைத்துப் பாண மழை பொழிந்தனர். அதனால் அசுரனின் வில்லும் தேரும் அழிந்தன. வீரர்கள் அவன் மார்பில் ஆயிரம் கணைகளைச் செலுத்தினார்கள். அக்கினி முகன் வேறொரு தேரில் பாய்ந்தான். நவவீரருள் எழுவரையும் சினத்துடன் நோக்கி, ''இத்துடன் அழியுங்கள்'' என்று சிவப் படைக்கலத்தை எடுத்து வழிபட்டு விட்டான். அப்படைக்கலம் விரைந்து சென்றது. அதனை ஏழு வீரர்களும் கண்டு அக்கினிப்படை என்று எண்ணி வருண படைக்கலங்களை விடுத்தார்கள். சிவப்படைக்கலம் அவற்றை விழுங்கி உலகம் அதிரச் சென்று எழுவருடைய உயிரையும் நொடியில் கவர்ந்து மீண்டது. நவ வீரரில் எழுவர் இவ்வாறு அழிந்தமை கண்ட பூதரும் அமரரும் வெருவி இருந்தனர். வீரவாகுதேவர் பூத வீரர்களுடன் அபயம் தந்து, அக்கினிமுகனை எதிர்த்தார். இருவரும் பல பல கணைகளை விடுத்துக் கடுமையாக அமர் புரிந்தனர். முடிவில் வீரவாகுதேவர் நஞ்சு பாய்ச்சிய நூறு கூர்மையான பாணங்களை விடுத்தார். அவை அக்கினி முகனுடைய மார்பைத் துளைத்தன. அக்கினிமுகன் அலறித்தேர் மீது சாய்ந்தான். அவன் மார்பிலிருந்து உதிரம் வெள்ளம்போல் பெருகியது. அவனது உயிர் போவதும் வருவதுமாக இருந்தது. ஒருவாறு தெளிந்த அக்கினிமுகன் இளமையில் தான் வழிபட்ட காளியை நினைந்தான். பகைவர்களுடைய போரில் நான் தோற்றால் அந்தத் தருணத்தில் உதவி செய்ய வேண்டும்' என்று அக்கினிமுகன் அந்த நாளில் காளியிடம் வரம் கேட்டுப் பெற்றிருந்தான்.

அக்கினிமுகன் காளியை நினைத்த அளவில் அவள் சூலத்தையும் வாளையும் ஏந்திச் சிங்க வாகனத்தின் மீது வந்தாள். அக்கினிமுகனை அடைந்து, ''அஞ்சவேண்டாம். உன் பகைவர்களாகிய பூதசேனைகளைக் கொல்வேன்'' என்று அருளி பூதர் அனைவரையும் அழிக்குமாறு முத்தலை சூலத்தை விடுத்தாள்; அது தீயையும் புகையும் சிந்திப் பல காளிகளையும் உண்டாக்கி விரைந்து சென்றது. வீரவாகுதேவர் காளியின் சூலத்தை நோக்கிப் பதினான்கு கணைகளைச் செலுத்தி, அதைப் பொடியாக்கினார். காளி மிகவும் சினந்தாள். மற்றொரு சூலத்தை விடுத்தாள். அது ஆலகாலம் போல் கொதித்துச் சென்றது. வீரவாகுதேவர் ஆயிரம் கணைகளால் அதனைத்துணித்தார். காளி உள்ளம் கனன்று சிங்கவாகனத்தினின்றும் இறங்கிக் கூரியவாளை எடுத்து வீரவாகுதேவரை



வெட்ட வந்தாள். வீரவாகுதேவர் அவளுடைய எட்டுக் கரங்களையும் இடக்கரத்தால் பிடித்து வலக்கரத்தால் மார்பில் ஓர் அறை அறைந்தார். காளியின் மார்பு கிழிந்தது. வாயும் மூக்கும் உதிரம் சொரிய மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். ஆணவமும் வீரமும் அழிந்த அவள் நாணத் துடன் வீரவாகுதேவரின் ஆற்றலை வியந்தாள். கந்தப்பெருமானின் ஏவலால் வந்துள்ள வீர வாகுதேவரை எதிர்த்து யார்தான் வெற்றி காணமுடியும்? வீரவாகுவிடம், ''வெற்றி உமக்கே'' என்று வாழ்த்திவிட்டுச் சிங்கத்தின் மீதேறித் தன் படைகள் சூழ்ந்துவர தனது இடத்துக்குச் சென்றாள் காளி.

அசுர காளி வீரவாகுதேவரை வாழ்த்தி அவரிடம் விடைபெற்றுச் செல்வதைக் கண்ட அக்கினிமுகாசூரன் மிகுந்த சினங்கொண்டு காளியை இகழ்ந்தான். ''வீரவாகுதேவரை நானே கொல்வேன்'' என்று சேனைகள் சூழத் தேரில் புறப்பட்டான். இருவரும் கோர மாகப் பொருதார்கள்.

இறுதியில் வீரவாகுவின் வீரபத்திராஸ்திர மானது அக்கினிமுகன் விடுத்தபிரமாஸ்திரத்தை விழுங்கி, அவனது தலைகளை வெட்டிக் கீழே தள்ளி உயிரையும் குடித்துவிட்டு வீரவாகுதேவ ரிடம் மீண்டது. அக்கினிமுகாசூரன் இறந்த தைக் கண்ட அமரர்கள் ஆனந்தக் கூத்தாடி ஆர்த்தார்கள்; வீரவாகுதேவரை வாழ்த்தி னார்கள்.

அவுண வீரர்களையெல்லாம் கொன்று போர்க்களத்தின் நடுவே நின்ற வீரவாகு தேவரை பூதர்களும், இலக்கம் வீரர்களும் வந்து சூழ்ந்தார்கள். மூர்ச்சித்துக் கிடந்த வீர புரந்தரரும் அங்கு வந்து சேர்ந்தார். ஆனால் வீரவாகுதேவரின் தம்பியர்களான எழுவர் மட் டும் அங்கு காணப்படவில்லை. அவர்களைச் காணாது வருந்திய வீரவாகு ''மற்ற எழுவரும் எங்குற்றனர்?'' என்று வினவினார்.

பூதவீரனான உக்கிரன், ''நூறு யோச னைக்கு அப்பால் ஆலமர நிழலில் அவர்கள் மாண்டு கிடக்கிறார்கள்'' என்றார். இதனைக் கேட்ட வீரவாகுதேவர் திடுக்கிட்டார். மனத் தைத் தேற்றிக்கொண்டு அருகில் இருந்தோர் அனைவரும் உடன் வர ஆலமரத்தடிக்குச் சென் றார். அங்கே பிணக் குவியல்களின் மீது தம்பி யர் எழுவரும் இறந்து கிடந்ததைக் கண்டார். தம்பியர் எழுவரையும் எடுத்தணைத்துப் புலம் பினார். அவர் கண்கள் குருதிநீரைத் சொரிந் தன.

''தம்பிமீர் தம்பிமீரென் றுரைத்திடும் தழுவிக்
கொள்ளும்
எம்பிமீ ரென்னும், ஐயோ! எங்ஙனஞ் சென்றீர்
என்னும்;
வெம்பினே னென்னும் என்னை விட்டகன்
றீரோவென்னும்
நம்பினேன் உம்மையென்னும் நானுமக்கு அய
லோவென்னும்''.

''நன்றாய் இருக்கிறது என் வீரம்! முருக வேளுக்கு இனி நான் என்ன சொல்வேன்?'' என்று பற்பலவாறு கூறிக் கண்ணீர் விட்டுக் கவலையில் ஆழ்ந்தார் வீரவாகு. சிறிதுபோதில் மீண்டும் அவரை வீரம் பற்றிக் கொண்டது.

வடவைத் தீயைப்போல் வெகுண்டு, என் தம்பியர் உயிரைக் கொண்டு சென்ற இயமனை இக்கணமே கொல்வேன். மார்க்கண்டேயர் உயிரைக் கவர வந்தபோது பட்ட உதையை மறலி மறந்தனன் போலும்? திருநீறும் கண்டி கையும் பூண்டு சிவநாமத்தை உச்சரிக்கும் உண் மையான சிவபக்தர்களிடம் செல்லக்கூடாது என்ற சிவாக்ஞையை அந்தக் கூற்றுவன் மறந் தான் போலும்! ஆறுமுகப் பெருமானின் அடி யவர்களாகிய என் தம்பியரின் உயிர்களை இய மன் எப்படித்தான் கவர்ந்து சென்றானோ?

''நீறு முகத்தார், கண்டிகை பூண்டார் நிமலன்
பேர்
கூறு முகத்தார் தம்புடை செல்லக் குலைகூற்
றன்.
ஆறு முகத்தான் அடியவர் ஆவி யலைத்தானே
சேறு முகத்தாழ் கரியை அடாதோ சிறு
புள்ளும்?''

என்று இயமனைச் சினந்தார். வீரவாகுதேவர் வில்லையெடுத்து நாணைப் பூட்டினார். ஒரு பாணத்தை எடுத்து அதில் நகத்தினால், ''கூற் றுவனே! என்னுடைய தம்பியர் உயிரைக் கொண்டு வா'' என்று எழுதி விடுத்தார்.

பாணம் இயம லோகத்தில் போய் விழுந் தது. இயமன் எடுத்துப் பார்த்தான். வீரவாகு தேவர் விடுத்த பாணம் என்பதை அறிந்ததும், நடுநடுங்கினான்; ''தூதர்களே! நவ வீரர்களில் யாரையாவது கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று தூதர்களிடம் வினவினான். இயமலோகம் முழுவதும் தேடினார்கள் தூதர்கள். அங்கு காணவில்லை. ஏழுவீரர்களும் கைலாய மலை யில் சூக்கும சரீரத்துடன் விளையாடிக் கொண் டிருந்தார்கள். அவர்கள் எழுவர் உயிரையும் இயமன் போர்க்களத்துக்குக் கொண்டுவந்து உடலில் சேர்ப்பித்தான்.

தூங்கி எழுந்தாற்போல் வீரர் எழுவரும் உயிர்த்தெழுந்தார்கள். வீரவாகுதேவர் பூத வீரர்கள் ஆகியோர் உள்ளம் எல்லையில்லா உவகை பூத்தது.

இயமன் வீரவாகு தேவரைத் தொழுது, ''உங்கள் தம்பியர் உயிரை அடியேன் கவர்ந்து செல்வேனா? கைலை சென்றிருந்த அவர்களை அழைத்துவந்தேன்'' என்று கூறி, அருள் பெற் றுச்சென்றான்.

அக்கினிமுகாசூரன் இறந்ததையும், மாண்ட எழுவர் உயிர் பெற்றதையும் பார்த்துக் கொண் டிருந்த ஒற்றர்கள் ஓடிச் சென்று சூரபன்மனிடம் நிகழ்ந்ததை உரைத்தனர். அதைக் கேட்ட சூரன், ''மகனே! மகனே! என்று கதறி அழுது துயரக் கடலில் ஆழ்ந்தான். இந்த துயர்ச் செய்தியை அறிந்த சூரனின் மனைவி பதும

கோமளை அழுது அரற்றி ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கினாள். இச்செய்தி நகரத்தில் பரவவே, வீரமகேந்திரம் முழுதும் அழுகையொலி பரவியது.

சூரபன்மனின் புதல்வர்கள் மூவாயிரர், அவர்கள், அக்கினிமுகன் இறந்ததையும் அதனால் சூரபன்மன் துயரக் கடலில் ஆழ்ந்திருப்பதையும் அறிந்து சூரபன்மனின் அரண்மனைக்கு வந்தார்கள்; தந்தையை வணங்கினார்கள். ''தந்தையே! இலக்கத்தொன்பான் வீரரிடம் போர் செய்ய அக்கினிமுகன் ஒருவனை அனுப்பினீர். மெலியராயினும் பலர் கூடினால் வலியரையும் வெல்லுவர் என்பதை நீங்கள் அறிந்ததில்லையா? அக்கினிமுகன் இறந்ததற்காகத் துயரப்படவேண்டாம். நாங்கள் மூவாயிரம் பேர்கள் இருக்கிறோம். இன்னும் இரணியன் இருக்கிறான்; பானுகோபன் இருக்கிறான். இவ்வளவு பேர்கள் இருக்கும்பொழுது உங்களுக்கென்ன குறை? நால்வகைச் சேனைகள் அழிந்துவிட்டனவே என்று கவலைப்படுகிறீர்களா? அந்தக் கவலையும் வேண்டாம். உங்கள் காலாட்படைகளுக்கு அழிவு இல்லை. இதுவரை போரில் இறந்த சேனைகள் இப்போது இருக்கும் நம்முடைய சேனைகளுடன்ஒப்பிட்டுப் பார்த்தால் கடுகளவே மாய்ந்ததாகவும், மலையளவு மீதமிருப்பதாகவும் தெரியும்'' என்று கூறினர்.

அவர்களுக்கு சூரபன்மன் விடை தந்து போர்க்களம் அனுப்பிவைத்தான். எண்ணில்லாத சேனைகளுடன் யுத்தப் பறையறைவித்துக் கொண்டு அவர்கள் போர்க்களம் அடைந்தபோது அது கண்ட அமரும் அஞ்சினார்கள்.

பூத சேனைகளுக்கு, அவுணப்படைகளுக்குப் பயங்கரப போர் மூண்டது. போரில் அசுரர் பலர் மாண்டனர். எண்ணிறந்த பூதகணங்களும் இறந்தன.

விஜயன், ஜயன், இடபன், கரவீரன், அதிகோரன், அசலன், ஆதிகுணன், வாமன், அந்தன், அகலிங்கன், அநகன், சதவலி, மாருதன், வருணன், சசிகண்டன் முதலாகிய ஆயிரவர் வீரவாகுதேவரிடம் விடைபெற்றுக் கந்தக்கடவுளைத் தியானித்து மூவாயிரவரை எதிர்த்துப் போருக்குச் சென்றனர்.

இரு தரத்தாரும் பொருததன் இறுதியில் ஆயிரவரில் விஜயனைத் தவிர ஏனையோர் அனைவரும் வலியிழந்து தோற்றோடினார்கள்.

துணைவர்கள் தோற்று ஓடியதைக் கண்ட விஜயன், ''சூரபன்மன் குமாரர்கள் மூவாயிரவரையும் யானே கொல்வேன்' என்று வஞ்சினம் கூறினான். சிவபெருமான் கொடுத்த அழியாத வில்லை வளைத்து மூவாயிரவர் மீதும் பாண மழைகளைப் பொழிந்தான். அப்பாணங்களால் தாக்குண்டவரின் அங்கங்கள் அறுந்தனவெனினும் பிரம்மதேவர் கொடுத்திருந்த வரத்தின் பலத்தால் அறுந்த அவயங்கள் மீண்டும் வந்து கூடின.

### இது உங்கள் கடமை

உங்கள் நண்பர்களுக்கிடையில் விரோதமும், சண்டையும் மூண்டால் இவைகளை அதிகப்படுத்த முயலாதீர்கள். பழையபடி அவர்கள் நண்பர்களாய் இருக்கச் செய்யவே முயலுங்கள்.

—ஸ்ரீ சத்ய சாயிபாபா

அதனைக் கண்ட விஜயன் திகைத்தான். அவர்கள் பெற்றுள்ள வரத்தின் சிறப்பை உணர்ந்தான். முருகன் திருவடியின் துணையின்றி அவர்களை வெல்லுவது அசாத்தியம் என்று உணர்ந்தான். முருகப்பெருமான் திருவடியைச் சிந்தித்து உள்ளம் உருகினான். கண்களில் நீர் பெருக்கியபடியே கந்தவேளைத் தியானித்தான்.

ஆறு முகப்பிரான் அன்றியிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறினன் அவனடி சிந்தை செய்தனன்
மாறிழி யருவி நீர் வழியுங் கண்ணினான்.

''உள்ளம் உருகினால் உடனாவார்' என்பது வேதமொழியல்லவா? பக்தி வலையிற்படும் அருள் வள்ளலாகிய ஆறுமுகப்பெருமான் அவன்முன் விண்ணில் தோன்றினார். ''அன்ப இம்மூவாயிரவரும் பிரமனிடம் வரம் பெற்றவர்கள். இவர்களைத் தனித் தனியாக போரிட்டு வெல்வது உன்னால் முடியாத காரியம். மூவாயிரவரையும் ஏககாலத்தில் ஒரே படையால் வீழ்த்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் இறப்பார்கள். இந்தா, இது காலவயிரவப் படை. இந்தப் படையால் நீ அவர்களைச் சங்காரம் செய்'' என்று கூறித் திவ்வியாஸ்திரத்தை விஜயனுக்குத் தந்து மறைந்தருளினார். விஜயன் மனம் மகிழ்ந்து அன்புடன் அப்படைக்கலத்தைப் பூஜித்து விடுத்தான். வயிரவப் படைக்கலம் விரைவாக வருவதை மூவாயிரருள் ஒருவனான உன்மத்தன் கண்டான். ''இந்தப் படைக்கலம் வந்து நம்மைத் தாக்குவதற்கு முன் ஒரு மாயப் படையினால் இவனை அழிப்பேன்'' என்று எண்ணி மாயப் படையை விடுத்தான். விஜயன் விடுத்த வயிரவப்படை விரைந்து சென்று எங்கும் இருளைப் பரப்பியது. மாயப் படையை அழித்தது. மூவாயிரவரையும் ஒரு கணத்தில் கூண்டோடு அழித்து மீண்டது. தேவர்கள் விஜயன் மீது பூமழை பொழிந்தார்கள். பூதர்கள் சந்திரனைக் கண்ட கடல் போல் ஆரவாரித்தார்கள்.

மூவாயிரம் புதல்வர்களும் ஒரு சேர மாண்ட செய்தியைக் கேட்ட சூரபன்மன் சிங்காதனத்தினின்றும் நிலத்தில் வீழ்ந்து புலம்பினான். தனது ஆட்சி அதிகாரம் பிரபை மங்கி மறையும் நாளும் வந்ததோ என எண்ணினான். அப்போது சூரியனும் அஸ்தமித்தான்.

(தொடரும்)



# பங்குனி உத்திரத்திருநாள்

**சி. வசந்தி,** எம்.ஏ.

பண்டைய காலத்தில், கோயில்கள் சிறந்த வழிபாட்டுத் தலமாகவும், அக்காலச் சமுதாய வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தையும் பெற்றிருந்தது. அக்காலத்தில் பொழுதுபோக்கிற்கு, இன்றுபோல வசதிகள் இல்லாத நிலையில் கோயில்களில் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. அவ்விழாக்காலங்களில், ஆடல், பாடல், கதை கூறுதல், நாடகம் நடித்தல் போன்றவற்றுடன், இறைவனையும் தங்கள் விருப்பம்போல் அலங்கரித்து, ஊர்வலமாக எடுத்துச்சென்று ஒருவிழாவாக கொண்டாடி மகிழ்ந்தனர். இதனால் கோயில்களில் மாதந்தோறும் விழாக்கள் நடைபெறுவது இன்றியமையாததாயிற்று.

தமிழ் மாதங்களில் கடைசியாக வருவது பங்குனி, இம்மாதமே இளவேனிலின் தொடக்க மாதம். இப்பொழுதுதான் இயற்கை அன்னை புதுவித இளந்தளிர்கள், பூக்களுடன் கூடிய புத்தாடைப் புனைந்து பொலிவுடன் திகழ்கின்றாள். இம்மாதத்தில், இருபத்தி ஏழு நட்சத்திரங்களில் பன்னிரண்டாவது ஆன உத்திர நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி நாளில் கொண்டாடப்படுவது பங்குனி உத்திரத் திருநாளாகும்.

**இலக்கியங்களில்:** இலக்கியங்களில் பங்குனி உத்திர நன்னாள் சிறப்பாகப் பேசப்படுகின்றது. திருஞானசம்பந்தர், திருமயிலையில் கொண்டாடப்பட்ட விழாக்களைப் பற்றிக் கூறத் தொடங்கும்போது பங்குனி உத்திர விழா, ஒலி விழாவாகக் கொண்டாடப்பட்டதாகக் கூறுகின்றார்.

**கல்வெட்டுக்களில்:**

கல்வெட்டுகளிலும், பங்குனி உத்திரத் திருவிழாப்பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன. சென்னையை அடுத்துள்ள திருவொற்றியூரில், உள்ள கோயில் கல்வெட்டில் பங்குனி உத்திர திருவிழாவினை 11 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் இராஜாதிராஜனே முன்னின்று நடத்தியுள்ளார், அப்பொழுது சோமசித்தாந்தம் எனப்படும் காபாலிக சைவத்தைப் போற்றிய சதுரானப் பண்டிதரும் உடனிருந்துள்ளார். அப்பொழுது ஆளுடைய நம்பியான சுந்தரரின் புராணமும் கூறப்பட்டது என்ற செய்திகளும் காணப்படுகின்றன.

மேலும் சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் வழியில் உள்ள திருவிடந்தை கோயில் திருவிடந்தை இறைவனுக்கு, முதலாம் ராஜராஜனின் 19 ஆம் ஆட்சியாண்டில் [கி.பி.1004]. பங்குனி உத்திரத்தன்று விழா நடத்தப்பட்டது. இவ்விழா முதல்நாளன்று கொடியேற்றத்துடன், ஒன்பது நாட்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. இவ்விழா நடைபெறும் ஒன்பது நாட்களும் 35 மறையவர்களுக்கு உணவு வழங்கவும், அவ்வாறு வழங்கப்படும் உணவிற்கும், அரிசி, உப்பு, நெய், மோர், பாக்கு வெற்றிலை, உணவு சமைப்பவர், மற்றும் விறகு அளிப்பவன் ஆகிய அனைத்திற்கும் வழங்கப்பட்ட நெல்லின் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. ''உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்'' என்ற முதுமொழிக்கேற்ப, அக்காலத்தில் விழாக் காலங்களில் உணவளித்தல் என்ற செயல் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.

**தற்போது பங்குனி உத்திரத் திருவிழா:**

தமிழகத்தில், பல்வேறு தலங்களில், பங்குனி மாதம் உத்திர நட்சத்திர நன்னாளில் விழாக் கொண்டாடப்படுகின்றது. பொதுவாக ஒவ்வொரு தமிழ்மாதத்தின் பௌர்ணமியிலும் ஒரு திருவிழாவைக் கொண்டாடுதல் தமிழர் மரபு. கடற்கரை அருகில் இருக்கும் கோயில்களில் பௌர்ணமி நாளைக் கொண்டுதான் விழாக்கள் நடைபெறும். திருவான்மியூர், மருந்தீஸ்வரன் கோயிலில், பௌர்ணமி நாளைப் பத்தாம் நாளாகக் கணக்கிட்டு கொடியேற்றப்படுகின்றது. ஏழாம்நாள் திருத்தேரும், ஒன்பதாம் நாள் வன்னிமரச் சேவையும், பத்தாம் நாள் வான்மீகி முனிவருக்கு இறைவன் ஆடிக்காட்டிய திருநடனக் காட்சியும் பதினோராம் நாள் தெப்பவிழாவும் நடைபெறுகின்றன.

பரிபாடல் போற்றும் திருப்பரங்குன்றத்தில் அக்காலத்தில் நடைபெற்றது போன்று இன்றும் பங்குனி உத்திரத் திருவிழா பெரும் விழாவாக 15 நாட்கள் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவின் பத்தாம் நாளன்று சூரசம்ஹார நிகழ்ச்சியும் பன்னிரெண்டாம் நாளன்று தெய்வயானைத் திருக்கல்யாணமும் பதிமூன்றாம் நாள் தேர்த்திருவிழாவும் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இவ்வாறு பங்குனி உத்திரத்திருவிழா அக்காலம் முதல் இக்காலம் வரை அனைத்துக் கோயில்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

கலியுகவரதனாம் முருகன் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியாக எழுந்தருளியிருக்கும் பழநியில் பங்குனி உத்திரத் திருவிழா அன்று இலட்சக்கணக்கான மக்கள் முருகரைத் தரிசிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.



# விவேகானந்தரின் பொன்மொழிக் குறள்கள்

அறநெறியண்ணல் **கி பழநியப்பனார்**

காப்பு

குணமாகப் பொன்மொழியைக் குன்றாது கூறக்
கணபதியின் பொற்கழலே காப்பு

நூல்

எழுமின் விழிமின் இலக்கை அடைமின்
எழுந்தடை எல்லாம் எதிர்த்து. 1

பெருஞ்செயல் ஆற்றப் பிறந்தவன் என்றே
பெருமிதம் கொள்க பெரிது. 2

அரியதோர் நற்செயல் ஆற்றிட வேண்டின்
எரியையும் அஞ்சாமல் எற்று 3

தள்ளுக அற்பர் தகைவிலாச் சொற்களை
கொள்ளார் அதைநல்லோர் கூர்ந்து. 4

தொல்லையும் இன்றித் துயருமின்றி வாழ்ந்திடவே
வல்லவனாய் அச்சமின்றி வாழ். 5

பயந்து பயந்து பலத்தை இழப்போர்க்கு
வையத்தில் ஏதுஇன்ப வாழ்வு? 6

பலவீன மேயென்றும் பாழாம் வறுமைக்கு
நலமற்ற அன்னையென நம்பு. 7

மன்னாதி மன்னனின் மைந்தனென எண்ணியே
மண்ணில் இளவரசாய் வாழ். 8

விஞ்ஞான மேதைகளும் வீரர்க ளும்நாட்டில்
எஞ்ஞான்றும் ஏமமென எண்ணு. 9

ஆண்மை யுடையோனாய் ஆக்குமோர் நல்மதமே
வேண்டும் நமக்கு விரைந்து. 10

வஞ்சனையால் கிட்டாது வான்புகழ்; வேண்டிடின்
நெஞ்சார வாய்மைவழி நில் 11

உடையும் உணவும் உமக்கே உரித்தாம்
தடையில் முயற்சியிருந் தால் 12

பிறந்திவ் வுலகில் பெரும்பயனா மென்றே
இறக்குமுன் வான்புகழை ஈட்டு. 13

நான்கினுடன் எட்டாண்டு நாட்டமுடன் வாய்மைபேசும்
ஆன்றோர்சொல் வேதங்க ளாம். 14

பொய்பேசிக் கோழையாய்ப் பூமிசை வாழாது
வாய்மையுடன் வீரனாக வாழ். 15

குற்றம் சிறிதுமின்றிக் குன்றா முயற்சியால்
பெற்றிடலாம் எண்ணிய பேறு. 16

தெய்வமென வாழ்ந்து, தெளிந்து, பிறரையும்
தெய்வமென வாழ்ந்திடச் செய் 17

வனப்பினும் நல்ல வலியுடல் பெற்றோரே
மனத்திட்பம் பெற்றிடுவர் மற்று 18

ஆண்களுடன் பெண்களும் ஆண்டவன் அம்சமெனக்
காண்போரே நல்லவர் கள். 19

நாட்டுமக்கள் வாழ்வை நலம்பெறச் செய்வதே
நாட்டுப்பற் றாகுமென நாடு 20

துயருறும் ஏழையின் துன்பம் துடைத்தல்
உயர்வில் பெரிதென வூக்கு. 21

ஏழைகளின் வேர்வையால் இன்புறும் செல்வர்கள்
ஏழைதுயர் காணாத(து) ஏன்? 22

ஈடாமோ ஆற்றல்கள் எத்துணையும், உள்ளநிறை
வாடாத அன்பின் வலிக்கு 23

தன்னலமே சற்றுமிலாச் சான்றோர்க்குப் பாரினில்
என்றும் பகைவர்கள் இல் 24

தன்னம்பிக் கையுடன் தாழா இறைப்பற்றே
முன்னேற்றும் வாழ்வை முனைந்து. 25

வன்மைமிகு மாற்றானும் வன்மை மறப்பரே
அன்புமிகு இன்மொழியால். 26

தொண்டராய் வாழ்வைத் தொடங்கிப் பயின்றவனே
அன்புத் தலைவனா வான். 27

தெய்வக் கிரிகைகள் செய்வதிலும் பாமரர்க்குச்
செய்தொண்டே மேலெனச் செய். 28

துயருறும் மக்களின் துன்பம் துடைக்க
அயராது வேண்டுவன ஆற்று. 29

பிறர்க்கே உழைத்துப் பிறர்க்கென வாழ்வோர்தம்
பிறப்பே உயர்ந்த பிறப்பு. 30

தொட்டாற் சேருமே தொலையாத் தீட்டென்போன்
முட்டாள் பலருள் முதல். 31

நன்மையும் தீமையும் நன்றிணைந்து தோன்றிடின்
நன்மை மிகுந்ததையே நாடு. 32

கடமையை ஆற்றல் கடனெனக் கொண்டால்
கடவுளே ஊக்குவர் காண். 33

தூங்காதீர் தோழரே! தூங்காதீர்! முன்னேறப்
பாங்காய் உழைப்பீர் பறந்து. 34

இயன்றபணி ஆற்றிடுக எவ்வுயிர்க்கும் அஃதே
பயன்தரும் தெய்வீகப் பணி. 35

வீண்வாதம் காலத்தை வீணாக்கும் வேலையென
வேண்டாத பேச்சை விடு. 36

குன்றா அறிவும் குழந்தை மனமுமே
நன்றெனப் பேணு நயந்து. 37

இறைதங்கும் கோயிலென ஊனுடலை என்றும்
முறையாகப் போற்று முனைந்து. 38

இன்சொல்லும் இன்முகமும் என்றும் இறைவனது
சந்நிதியின் காட்சி தரும். 39

இன்பம் பெறுவோர் இணைந்ததோர் துன்பத்தை
என்றும் வெறுப்பது ஏன்!. 40

நற்பணி யாதெனில் நாட்டமுடன் யாவருந்தம்
சுற்றமெனத் தொண்டு செயல். 41

பிறர்குற்றம் பேசிப் பொழுதினைப் போக்க
மறந்தும் முயலாது வாழ். 42

தன்னடக்க வாழ்வினைத் தன்மையாய்ப் பெற்றிடின்
மன்னுபுகழ் சேர்ந்திடும் மற்று. 43

பணிசெய்! பணிசெய்! பலர்துயர் போக்கத்
துணிவுடன் ஆற்றுக தொண்டு. 44

தன்னையே தான்வெறுக்கும் தன்மையர்க்கு [வாழ்க்கையில்
என்றென்றும் முன்னேற்றம் இல். 45

அன்பும் ஒழுக்கமும் ஆர்வமும் தந்திடுமே
பொன்னும் தராத புகழ். 46

பணிவுடமை முன்னர் பயின்றோர்க்குப் பின்னர்
அணித்தலைமை நாடிவரு மாம். 47

இயற்கையை வெல்லும் இயலாம் அறிவே
துயரைத் துடைப்போர் துணை. 48

தானெனும் வீம்பைத் தவிர்த்த ஒருவர்க்கு
வான்புகழ் தானே வரும். 49

தன்னல மற்ற தளர்விலா அன்பினைப்
பொன்னெனப் போற்றல் புரி 50

அரிய தியாகத்தை ஆற்றியே வாழ்வில்
அரிய புகழை அடை 51

பிறர்க்காக வாழும் பெருந்தகை உய்வர்
பிறவாமைப் பேறினைப் பெற்று 52

கரம்நமக்கு ஈந்தோன் கருணையை எண்ணி
உரமிலார்க்கு என்றும் உதவு. 53

துறவுமேற் கொண்டோர் துயருற்றோர்க் கென்றும்
உறவென வாழ்தல் உயர்வு. 54

தன்னலம் நாடுதல் தாழ்வாம் ஒழுக்கமென
எண்ணித் தவிர்த்தலே இனிது. 55

ஏதேனும் நற்பணியை எத்துணையும் செய்தலே
மாதேவன் பூசையென வாழ். 56

இரத்தல் இழிவென்றே ஈதலே செய்து
பிறப்பின் பயனைப் பெறு. 57

தன்னலம் இன்மையே தந்திடும் ஏற்றம்போல்
என்னலமும் தந்திடாது இங்கு. 58

கொடுத்துப் பயிலும் குணமே உயர்வாம்;
எடுத்துப் பயில்தல் இழிவு. 59

பயனைக் கருதாப் பணிகளை என்றும்
உயர்வெனக் கொள்ளும் உலகு. 60

விலைபேசி அன்பினை விற்றல் இழிவு;
குலையாதுன் அன்பைக் கொடு. 61

மனிதர் துணையினும் மாதேவன் என்றும்
தனித்துணையாய் நின்றிடுவான் சார்ந்து. 62

பற்றும் துணிவும் பணிவும் விழிப்புடன்
உற்றபணி ஓங்கும் உயர்ந்து. 63

கருமத்தில் கண்ணும் கருத்தும் இருப்பின்
திருவருள் நல்கும் சிறப்பு. 64

எதிலும் நிதானம் இன்பமாம்; துன்பம்
மதியில் பதட்டத்தால் மற்று. 65

ஒற்றுமை என்றும் உயர்வினைத் தந்திடும்
வெற்றியும் கூட்டும் விரைந்து. 66

இழந்ததை எண்ணியெண்ணி ஏங்குதல் வேண்டாம்
உழலாது ஊக்கி உயர். 67

தான்பெற்ற ஞானத்தால் தற்பெருமை கொள்பவன்
மாண்பற்ற வீணனேயா வான். 68

செல்வரினும் ஏழையே செய்தற் கரியனவும்
நல்லனவும் செய்வான் நயந்து. 69

எள்ளாதே சற்றும் எதனையும் எண்ணாது;
கொள்வதைச் சிந்தித்துக் கொள். 70

தீண்டாமை வாதியாய்ச் சீரழிந்து போகாது
மாண்புடை ஞானியாய் வாழ். 71

என்றும் உறுதி இழக்காமல் வீறுடன்
நன்றாம் உயர்வினை நாடு. 72

தெளிந்த மனத்துடன் தூய்மையாம் வாய்மை
அழியாப் புகழுக்கு அணி. 73

எழுமின் விழிமின் எதிர்மின் மடியை!
விழுமிய பெற்றிடு வீர் 74

வேண்டுமோ சாதிகளில் வேற்றுமை? யாவரும்
மாண்புடை ஓரின மாம். 75

சக்தியின் பாதமலர் சாலவும் போற்றியே
பக்தியுடன் வீறுவேண்டிப் பணி. 76

மேல்நாட்டார் செய்வதெல்லாம் மேன்மையெனக் [கொள்ளுதல்
சால்பற்றச்செய்கையெனச் சாற்று. 77

தூண்டுக ஆன்மாவின் தெய்வீகச் சக்தியை
யாண்டும் ஒளிமயமே யாம். 78

நல்லாட்சி வேண்டுவோர் நன்றாகக் கல்வியுடன்
நல்லறிவை முன்பெறுதல் நன்று. 79

நம்புனித நூல்களை நாட்டமுடன் பாமரரும்
செம்மையாய்க் கற்கவழி செய். 80

பகைவரை வெல்லும் படையினும் அன்பே
தகையுடை வெற்றி தரும். 81

அகத்தும் புறத்தும் அடங்கின் பெறலாம்
மகத்தான தெய்வ மனம். 82

இன்னாமை எள்ளளவும் எவ்வுயிர்க்கும் செய்யாதார்
இன்பமுடன் வாழ்வர் இனிது. 83

நான்பலம் அற்றவன் நான்பாவி என்றுனது
மாண்பினைத் தூற்றாது வாழ். 84

செல்வச் செருக்கையும் தேர்கல்விச் செருக்கையும்
வெல்லும் மனத்திட்பம் வேண்டு. 85

உன்னுடை உயர்விற்(கு) உகந்த உறுதியை
உன்னிடம் காண்கவே ஓர்ந்து. 86

எளிதாம் புறத்தில் இயற்கையை வெல்தல்;
எளிதோ அதுஅகத் தில்? 87

வானோரும் உய்தற்கு மானிடராய்த் தோன்றுவதால்
வானோர்க்கும் நீமேலா வாய். 88

நல்லுடலைப் பெற்றோரே ஞானம் பெறுவதால்
வல்லுடலைப் பெற்றவனாய் வாழ். 89

விரிவுபெற வேண்டின் விளக்கமாய்க் கல்வி
அறிவினைப் பெற்றிடுக ஆய்ந்து. 90

வெல்வது மெய்யேயாம்; வெல்லாது பொய்யெனில்
வெல்லும் நெறியே விரும்பு. 91

## கண்ணீர் விடுக

செல்வத்திற்காக,வேறுபல சுகத்திற்காக மனிதர்கள் ஆறாகக் கண்ணீர் பெருக்குகிறார்கள். கடவுளைக் காணவேண்டும் என்றோ, அவரிடம் போதுமான பக்தி கொள்ளவேண்டும் என்றோ ஒருதுளி கண்ணீர் சிந்தினால் என்ன?

—இராமகிருஷ்ண பரமஹம்சர்

அன்புடைமை வாழ்வின் அறநெறி; அஃதிலார்
புன்நெறியில் வாழ்ந்திடும் பேய். 92

நோயாளி யைப்பேணல் நோன்பாய்க் கருதியே
ஓயாமல் அன்புடன் ஓம்பு. 93

நிலம்போல் பொறையுடை நீர்மையுடை யோரை
உலகம் புகழும் உவந்து. 94

நடுவற்ற செய்கையால் நாளும் பல்லோர்
கெடுவதை எங்கெங்கும் காண். 95

இரக்கத்தால் எஞ்ஞான்றும் ஏழைக்கிரங் கற்க
பரம்பொருளைப் பாமரரில் பார். 96

அமைதியாய்த் நம்பணியை ஆற்றுவதே நன்றாம்
சுமையாம் விளம்பரத் தொடர்பு. 97

பிறந்தோர் இறத்தல் பிழைபடா; இன்றே
இறவாப் புகழினை ஈட்டு. 98

சிறுவுதவி மற்றவர்க்கு செய்தொழுகும் நல்லோர்
பெறுவர் உயர்தியானப் பேறு. 99

தன்முயற்சி தப்பாது தந்திடும் வெற்றியுடன்
வன்மைமிகு நல்லதோர் வாழ்வு. 100



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

செந்தமிழ்ச் செல்வமணி
**கோ. சண்முகம், பி.காம்,**

ஐம்புலன்கள் அடங்காமல் இருப்பதற்கு மனிதனிடமுள்ள ஆசையும் ஆணவமுமே அடிப்படைக் காரணம் என்பதைச் சென்ற இதழில் விரிவாக சிந்தித்தோம்.

மனிதன் இறைசிந்தனை ஒன்றினாலேயே ஆசை, ஆணவம் இவ்விரண்டையும் ஒடுக்க இயலும். இதையே

''அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்ட
வந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தை வைப்பது
எந்நாளோ?''.

என்கிறார் தாயுமானவர்.

இறை சிந்தனையோடு தனிமையில் தியானத்தில் இருந்தார் சுவாமி அரவிந்தர். 1909-ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் அவர் அலிப்பூர் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். அத்தனிமைச் சிறையில் தாம் பெற்ற அருள் அனுபவத்தை பின்வருமாறு கூறுகிறார்.

''நான் சிறையில் தனிமையில் தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது விவேகானந்தர் இரண்டு வாரங்கள் தொடர்ந்து இடைவிடாது என்னுடன் பேசிய குரலைக் கேட்டுக் கொண்டிருந்தேன். மேலும் அவர் இருப்பதையும் உணர்ந்தேன். அக்குரல் ஆன்ம அனுபவத்தின் மிக முக்கிய நிலையினை பற்றிப் பேசியது''.

இந்நிலையை அவர் அடைந்ததற்கு அடிப்படையே இறை சிந்தனையோடு கூடிய தியானமே, இதுவே ஐம்புலன்களை அடக்குவதற்கு உரிய சாதனம்.

முடிந்த முடிவாக கருதப்படுகின்ற சைவ சித்தாந்தம் ''தோற்றமும் முடிவும் இன்றி என்றும் இருப்பவை ஆறு பொருள்கள்'' என்று உறுதியாக கூறுகின்றன. இவையாவன, இறை, உயிர், ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்த மாயை ஆகும். ஆணவம், கன்மம், சுத்தமாயை அசுத்தமாயை இவை நான்கும் தொகுத்து ''தளை'' என்று அழைக்கப்படுகின்றது. எனவே இறுதியாக என்றும் உள்ளவை இறை, உயிர் தளை (பதி, பசு, பாசம்) என்ற மூன்றாகும்.

இதில் 'தளை' பின்பு ஆணவம், கன்மம் மாயை என்று மூவகையாகப் பிரிகிறது.

இவ்வுண்மையை 14 சாத்திர நூல்களுள் ஒன்றான உமாபதி சிவனார் அருளிச்செய்த திருவருட் பயனில் காணலாம்.

''ஏகன், அநேகன், இருள், மருமம், மாயை
இரண்டு
ஆக இவை ஆறு ஆதியில்''.

—திருவருட்பயன்.

இந்த மூன்று பொருள்களும் தனித்தனி பொருள்களே. ஆகவே எதுவும் எதிலிருந்தும் தோன்றவில்லை. எதுவும் எதிலும் ஒன்றாக ஒடுங்கி விடுவதும் இல்லை.

இதில் பேரறிவுப் பொருளாக விளங்குவது இறை. எல்லாப் பொருளையும் தானே அறியும், தான் அறிந்து உயிருக்கு அறிவித்தலையும் செய்யும். உயிர் சிற்றறிவுப் பொருளாக இருப்பதால், அது பிறர் அறிவித்தாலன்றி தானே அறியாது. 'தளை' அறிவே சிறிதும் இல்லாதது. எனவே பிறர் அறிவித்தாலும் அறிய மாட்டாது.

பாசம் என்பது ஆணவம் கன்மம், மாயை என்று மூன்றாக பிரிவதை முன்பு பார்த்தோம். இதில் 'மாயை' என்பது அனைவராலும் உணரப்படுவதே. எண்ணற்ற பல்வேறு பிறவிகளாக காணப்படும் உடல்களும் மற்றும் நிலம் நீர் முதலிய மூலப் பொருள்களும், அவற்றினால் உணரப்படுவதே. எண்ணற்ற பல்வேறு பிறவிகளாக காணப்படும் உடல்களும் மற்றும்

நிலம் நீர் முதலிய மூலப் பொருள்களும், அவற்றினால் ஆக்கப்படும் சிறு பொருள்களும் அடங்கிய இந்த உலகப் பரப்பு முழுவதும் மாயையே.

'கன்மம்' என்பது மிக எளிதாக காட்சியில் உணரமுடியாததாகவும் ஆனால் சிறிது நுட்பமாக நோக்கினால் அதை உணரக் கூடியதாகவும் இருப்பது.

இவற்றிற்கு மேல் உள்ள 'ஆணவம்' என்பதை உணர்வது மிகக்கடினமானஒன்று. இதை சைவ சமயம் தவிர ஏனைய மதங்கள் ஏற்றும் கொள்வதில்லை.

தூலப் பொருளாக சொல்லப்படுகின்ற பருப்பொருள் எளிதில் உணரப்படும். சூக்குமப் பொருளாக சொல்லப்படுகின்ற நுண்பொருள் எளிதில் உணரமுடியாதது. எனவே மாயை எனப்படுவது பருப்பொருளாகும். 'ஆணவம்' எனப்படுவது சூக்குமப் பொருள் ஆகும். 'கன்மம்' எனப்படுவது இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பொருளாகும். இவை மூன்றுமே 'மும்மலங்கள்' என்று குறிப்பிடப்படுகின்றன.

இம்மூவகை மலங்களில் (பாசங்களில்) ஆணவமே முதலாவது. செம்பு என்றுஉண்டோ அன்றே அதற்குக் களிம்பு இருப்பது போன்று ஆன்மா(உயிர்) என்று உண்டோ அன்றே அதற்கு ஆணவம் உண்டு என்பதுதான் சைவசித்தாந்தம். அதுமட்டுமல்ல. அந்த ஆணவ மலத்தை நீக்க வேண்டும் என்றால் இயல்பிலேயே ஆதியிலேயே மலம் இல்லாதவனாகிய இறைவன்தான் உயிர்களிடம் மலத்தைத் போக்கவேண்டும் என்ற கருத்தையும் சைவ சித்தாந்தம் திட்டவட்டமாகக் கூறுகிறது.

இப்படி இயல்பிலேயே உயிர்களிடம் சேர்ந்திருக்கும் ஆணவ மலத்தை நீக்குவதற்கு இறைவன், கன்மம், மாயை என்கிற மேலும் இரண்டு மலங்களைச்(அழுக்குகளை) சேர்க்கின்றான். செம்பில் உள்ள களிம்பை நீக்குவதற்குச் சாம்பல் புளி போன்றவற்றை சேர்ப்பது போன்று இயல்பாக உள்ள ஆணவ மலத்தை நீக்குவதற்கு கன்மம், மாயை இரண்டும் சேர்க்கப்படுகிறது. சாம்பலும் புளியும் அழுக்கிற்கு மாற்று அழுக்காவது போன்று மாயையும் கன்மமும் ஆணவ மலத்திற்கு மாற்று மலங்களாக உள்ளன.

உலகமாக மாயை உருவெடுக்கும் போது முதன் முதலில் 'தத்துவம்' என்கிற மூலப் பொருளாக உருவெடுக்கும். அதற்குப்பின்பு தனு, கரணம், புவனம், போகம் என்னும் நான்கு வகையான உலகமாய் மாறிப் பயன் படும்.

தனு —உடம்பு
கரணம்—மனம் முதலிய உட்கருவிகள்
புவனம் —இடம்
போகம் -— நுகர்ச்சி பொருள்

நிலம் முதல் நாதம் முடிய உள்ள 36 தத்துவக் கருவிகளும், ஒன்றன் பின் ஒன்றாக ஒடுங்கினால் தான் ஆன்மா பேரின்பத்தை அடைய முடியும்.

இதைப் பதினான்கு சாத்திர நூல்களுள் ஒன்றான உண்மை வீளக்கத்தில் மனவாசகங் கடந்தார்

''தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்ததில் நிற்கின்ற பெற்றிபோல்-முத்திதனில்
சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமாய் ஓதியிடுந் தான்''

என்று விளக்கமாக உணர்த்துகின்றார்.

தத்துவங்கள் எனப்படும் மூலப் பொருள்கள் முதலில் மாயையிலிருந்து தோன்றும். பின்னர் அவற்றின் காரியமாக தனுகரண புவனபோகங்கள் அத்தத்துவங்களில் இருந்து தோன்றும்.

சிவதத்துவம் — 5
வித்தியா தத்துவம் — 7
ஆன்ம தத்துவம் —24

எனத் தத்துவங்கள் 36.

தத்துவங்களின் கூறாகிய தாத்துவிகங்கள் அறுபது.

''அங்கி பாநு அமுத கதிர்கள் என
அந்தித்த மந்த்ரமென
அறையு மறையென
அருந் தத்துவங்கள்''

என்பார் அருணகிரிப் பெருமான் பழநி திருப்புகழில் (அதல விதல முதல்-)

''மூன்று வகைக் கிளையு முப்பத் தறுவரையும்
கான்றுவிழச் சுட்டுக் கருவேரறுத்தாண்டி''

என்கிறார் அருட்புலம்பலில் பட்டினத்தார்.

ஆன்மாக்கள் இறைவனை அடைய முதலில் ஐம்புலன்களை அடக்கும் உபாயத்தினையும், தத்துவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒடுங்கும் நுண்பொருட் கருத்தினையும் விநாயகப் பெருமான் தனக்கு அறிவித்ததை

''உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையில் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து''

எனக் கூறுகிறார் ஔவை பிராட்டியார். (25-29 அடிகளில்).

(தொடரும்)

# நித்தம் வணங்கிடுவோமே.

மா. கோபாலன், எம். ஏ.,

தலையானை யாவர்க்கும் தலைமை யானை
தத்துவனைத் தற்பரனைத் தாயா னானைக்
கலையானை கலையனைத்து மானான் தன்னை
கல்லானைக் கற்றவர்தம் கருத்து ளானை
நிலையானை நெருப்பானை நீற்றான் தன்னை
நின்மலர்தம் நெஞ்சகமே கோயி லானை
மலையான்ன மன்மதனை மாய்த்தான் தன்னை
மனத்தகத்தே யிருத்திநிதம் வணங்குவாமே.
1.

கண்ணானைக் கண்ணகத்தே ஒளியான் தன்னை
கரியுரிவைப் போர்த்தானைக் காத லானை
உண்ணாடு முத்தமனை, ஊரில் லானை
ஊரரவ மேவிரும்பி யணிந்தான் தன்னைப்
பெண்ஆணாய்ச் செய்தானைப் பேசா தாலிற்
பேருண்மை வெளியிட்ட பெம்மா னைத்தீ
வண்ணானை வாழ்த்துக்கு மெட்டா தானை
மணத்தகத்தே யிருத்திநிதம் வணங்கு வாமே
2.

கொல்லானை யுரிபோர்த்த கோலத் தானைக்
கோலக்கா தனில்தாள மீந்தான் தன்னை
எல்லானைப் பல்லிழக்கச் செய்தானைப்பேர்
இந்திரனைத் தோள்முரித்த ஈச னைக்கண்
இல்லானைக் கழலாலே ஒறுத்தான் தன்னை
இரந்துண்ணத் தலையோட்டை யேந்தி
னானை
மல்லார்ந்த மலைமங்கை மணாளன் தன்னை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே
3.

கட்டார்வா ளெயிற்றரவ மணிந்தான் தன்னை
காதார்வெண் குழையானைக் காட்டில்
வெந்து
பட்டார்தம் என்பணியும் பரமன் தன்னை
பணியார்ந்த கயிலாயத் திறைவன் றன்னை
ஒட்டார்தம் புரமூன்று மெரித்தான் தன்னை
உறவொன்று மில்லானை யொப்பி லானை
மட்டார்ந்த மெல்லோதி மணாளன் தன்னை
மனத்தகத்தே யிருத்திநிதம் வணங்குவாமே.
4.

கறையான மிடற்றானைச் சடையி லொற்றைக்
கலையார்த்து நிற்பானைக் கதியென் பார்உள்
உறைவானை யோருருவ மில்லா தானை
ஊர்வதற்கோர் வெள்ளேறே யுடையான்
தன்னை
விரையாரும் கொன்றைமலர் விழைவான்
தன்னை
விள்ளரிய கருணையுமை மணாளன் தன்னை
மறைநான்கும் அறியாதே ஒளிவான் தன்னை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே.
5.

அன்றமரர் உய்யகடல் நஞ்சுண்டானை
அடைக்கலமாய்ப் போந்தமதி சடைசேர்த்
தானை
குன்றமதில் ஒருவிரலால் இலங்கைக் கோவைக்
கூவியழச் செய்தானைக் கூட லானைக்
கொன்றைநறுங் கண்ணிதவழ் ஆகத்தானை
குறையனைத்தும் நிறைவாகக் கொள்வான்
தன்னை
மன்றமதி லொருநட்ட மாடு வானை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே
6.

சூலங்கைக் கொண்டானைச் சோதி யானைச்
சுரர்வாழப் பெருங்கருணை யுயிர்க்குத்
தோற்றி
ஆலங்கைக் கொண்டருந்தி நீல கண்ட
மானானை யாதியந்த மில்லா தானை
கோலங்கள் கொண்டானைக் குழைந்த மேனி
குளிர்தருவாய் உயிர் ஒடுங்கக் கொடுப்பான்
தன்னை
மாலங்கை தொழுதேத்த நின்றான் தன்னை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே.
7.

ஆராழிக் கரையின்றி நிலைப்பித் தானை
அருளாழி ஒருமாலுக் கீந்தான் தன்னை
ஓராழித் தேரானை ஒறுத்தான் தன்னை
உணர்வாழி கடந்தானை உரையானைக்கால்
தேரானை யுடலட்ட தேவன் தன்னைத்
திருவானைத் தெருளான பொருளான்
தன்னை
வாரானை உரித்தானை மறைக்காட் டானை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே.
8.

ஒருடம்பில் ஈருயிரே யானான் தன்னை
ஒன்றாகிப் பலவாகி நின்றான் தன்னை
நாருடம்பில் நறுங்கொன்றை நயப்பான்தன்னை
நண்ணுவார்க்கு நல்லானை நம்பன்தன்னை
ஏருருவம் உள்ளானை இல்லான் தன்னை
எண்ணுருவம் இறந்தானை இயமவெற்பின்
வாருருவக் குழலுமையாள் மணாளன் தன்னை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே.
9.

அருங்காழிக் கிறைக்காச்சா புரத்தில் முத்தி
அளித்தானை அமணர்க்கே டனைத்தும்
போக்கிப்
பெருங்காத லரசர்க்குப் பேறீந் தானைப்
பித்தாய மறையோயாய்ப் பெருந்தோ
ழற்குத்
தருமாற்றுத் தொழும்புணர்த்தித் தடுத்தாண்
டானைத்
தழைகுருந்தை யுழைகுருவாய்ப் போந்து
ஞான
மருவார மணிமொழியார்க் கருள்செய்தானை
மனத்தகத்தே இருத்திநிதம் வணங்குவாமே.
10.

# சோழநாட்டு வைணவத் திருத்தலங்கள்

நித்திலக்கோ

### 29 திருவெள்ளியங்குடி

கோலவில் இராமன், மரகதவல்லி

காற்றிடைப் பூளை கரந்தன அரந்தை
உறக்கட லரக்கர்தம் சேனை
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த
கோலவில் இராமன் தன் கோயில்,
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள்
ஊழ்த்துவீழ்ந் தனவுண்டு மண்டி,
சேற்றிடைக் கயல்கள் உகள்திகழ் வயல்சூழ்
திருவெள்ளி யங்குடி யதுவே.
—பெரியதிருமொழி

(பூளை-ஓர் பூண்டு, அரந்தை-துன்பம், ஊழ்த்தல்-கனிதல்,செவ்வியழிதல்,உகளுதல்-புரளுதல் வெள்ளி-சுக்ரன் தவம் புரிந்து பேறுபெற்ற தலம். மண்ணியாற்றின் தென் கரையில் உள்ளது.)

திருவிடை மருதூரிலிருந்து 5 கல் தொலைவு, இத்தலத்திற்கு வடக்கே ஒருகல் தொலைவில், திவ்விய பிரபந்தத்துக்குப் பேருரை கண்ட பெரியவாச்சான் பிள்ளை பிறந்தருளிய செங்கநல்லூர் என்னும் ஊர் இருக்கிறது.

திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் உவந்து போற்றியுள்ளார்.

இந்தச் சந்நிதியில் கருடாழ்வார் சங்கு சக்கரதாரியாகக் காட்சியளிப்பது விசேஷம்.

### 30 மணிமாடக் கோயில் (திருநாங்கூர்)

நந்தாவிளக்குப் பெருமாள், புண்டரீகவல்லி நரநாராயணன்

நந்தா விளக்கே! அளத்தற் கரியாய்
நரநாரணனே! கருமா முகில்போல்
எந்தாய், எமக்கே யருளாய்' எனநின்று
இமையோர் பரவுமிடம், எத் திசையும்
கந்தார மந்தேன் இசைபாட மாடே
களிவண்டு மிழற்ற நிழல் துதைந்து,
மந்தார நின்று மணமல்கு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே
—பெரிய திருமொழி

(கந்தாரம்-காந்தாரம்-ஓர்பண்; மாடு-பக்கம் மிழற்றுதல்-இன் சொற் கூறல்)

சீர்காழியினின்றும் 5 கல் தொலைவு, திருவாலியிலிருந்து தெற்கே இரண்டு கல்லில் இருக்கும் சிற்றூர்.

இது முதல் திருதெற்றியம்பலம் வரையுள்ள ஆறு கோயில்களும், திருநாங்கூரிலேயே உள்ளன. தில்லை மூவாயிரவர் நாங்கை நாலாயிரவர்' என்றொரு வழக்குண்டு.

நாராயணப் பெருமாள், திருமங்கையாழ்வாரின் 12 பாசுரங்களைப் பெற்று உகந்தவர்.

### 31 வைகுந்த விண்ணகரம்

வைகுந்தநாதன் - வைகுந்தவல்லி, தாமரைக் கண்ணுடையபிரான்

வங்கமலி தடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர் பலர் கூடி மாமலர்கள் தூவி,
'எங்கள் தனி நாயகனே! எமக்கருள்வாய்'
என்னும்
ஈசனவன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக்
குதிப்பச்
சேலுகளும் செழும்பணை சூழ் வீதிதோறும்
மிடைந்து,
மங்குல்மதி யகடுரிஞ்சு மணிமாட நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே
—பெரியதிருமொழி

(வங்கம் கப்பல், பங்கம் என்பதன் திரிபாய், அலையென்றும் கொள்ளலாம். தட-பெரிய; வாளை-பெருமீன், பணை-வயல்; பண்ணை என்பதின் இடைக்குறை; மிடைதல்-நெருங்குதல்; மடநெஞ்சே-அறியாதமனமே; மங்குல்-ஆகாயம், மேகம்; அகடு-நடுஇடம்; உரிஞ்சுதல்-தடவுதல்; மணிமாடம்-இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மாடமாளிகைகள்.

இதுமுதல் இனிவரும் சோழநாட்டு திருப்பதிகள் தோறும் திருமங்கையாழ்வார் ஒவ்வொரு திருமொழி பாடிப் பரவியுள்ளார்.

### 32 அரிமேய விண்ணகரம்

குடமாடு கூத்தப் பெருமாள், அமுத கடவல்லி

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழத்
தீவினைகள் போயகல அடியவர்கட்கென்றும்
அருள்நடந்து, இவ்வேழுலகத் தவர்பணிய
வானோர்
அமர்ந்தேத்த இருந்தவிடம், பெரும்புகழ்வே
தியர்வாழ்



தருமிடங்கள் மலர்கள்மிகு கைதைகள் செங்கழு நீர்
தாமரைகள் தடங்கள் தொறும் இடங்கள் தொறும் திகழ
அறுவிடங்கள் பொழில்தழுவி எழில் திகழு நாங்கூர்
அரியமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!

—பெரிய திருமொழி

(இருபாலும்-இரண்டு புறமும்,; திகழ-வீற்றிருக்க; தடங்கள்-தடாகங்கள்; இடங்கள்- நிலங்கள்.)

## 33 வண்புருடோத்தமம்

புருடோத்தமப் பெருமாள்-புருடோத்தமநாயகி

அண்டரானவர் வானவர் கோனுக்கென்(று)
அமைத்தசோறதுவெல்லாம்
உண்டு, கோநிரை மேய்த்தவை காத்தவன்
உகந்தினி(து) உறைகோயில்,
கொண்டல் வார்முழ வின்குளிர் வார்பொழில்
குலமயில் நடமாட,
வண்டு தானிசை பாடிடு நாங்கூர்
வண்புருடோத்தமமே.

—பெரிய திருமொழி

(அண்டர்-இடையர்; கோநிரை-பசுக்கூட்டம்; முழவம்-பெருவாயனென்னும் வாத்யம், மத்தளம்; வார்-நீளம்)

## 34 செம்பொன்செய்கோயில்

பேரருளாளப் பெருமாள்-அல்லிமாமலர் நாச்சியார்.

மல்லைமா முந்நீர் அதர்பட மலையால்
அணைசெய்து மகிழ்ந்தவன்றன்னை,
அல்லின்மீ தியன்ற கடிமதில் இலங்கை
கலங்கவோர் வாளிதொட் டானை
செல்வநான் மறையோர் நாங்கைநன் நடுவுள்
செம்பொன்செய் கோயிலுனுள்ளே
அல்லிமா மலராள் தன்னொடும் அடியேன்
கண்டுகொண்(டு) அல்லல் தீர்ந்தேனே.

—பெரிய திருமொழி

(மல்லை-வளப்பம்; முந்நீர்-சமுத்திரம்; அதர்-வழி; கடி-காவல்; வாளி-பாணம்; அல்லல்-துன்பம், தோஷம்)

## 35 திருத்தெற்றி அம்பலம்

(செங்கண்மால்-செங்கமலவல்லி)

சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு
திருக்குளம்பில் கணகணப்பத் திருவா காரம்
குலுங்க, நில மடந்தைதனை யிடந்து புல்கிக்
கோட்டிடைவைத் தருளியவெங் கோமான் கண்டீர்
இலங்கியநான் மறையனைத்தும் அங்கம்ஆறும்
ஏழிசையும் கேள்விகளும் எண்திக் கெங்கும்
சிலம்பியநற் பெருஞ்செல்வம் திகழும் நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்மண் மாலே.

—பெரிய திருமொழி.

வாரக அவதாரச் சிறப்பு.

(சிலம்பு-நூபுரம்; பரல்-பருக்கைக்கல்; ஆகாரம் இருப்பிடம்; இடத்தல்-பிளத்தல்; புல்குதல்-தழுவுதல்; கோடு-தந்தம்; சிலம்புதல்-ஒலித்தல்

## 36 திருத்தேவனார் தொகை

(கீழைச் சாலை)

மாதவப் பெருமாள், தெய்வநாயகன் -கடல் மகள் நாச்சியார்.

போதலர்ந்த பொழில்சோலைப் புறமெங்கும்
பொருதிரைகள்,
தாதுதிர வந்தலைக்கும் தடமண்ணித் தென்
கரைமேல்
மாதவன்றா னுறையுமிடம் வயல்நாங்கை, வரி
வண்டு
தேதெனவென் றிசைபாடும் திருத்தேவனார்
தொகையே

—பெரிய திருமொழி.

(போது-மலரும் பருவத்து அரும்பு; பொழில்-சோலை; தாது-மகரந்தம்)

இத்தலம் திருநாங்கூருக்கு வடக்கே வயல் வழி இரண்டு கல்தொலைவு. அண்ணன் கோயிலுக்குக் கிழக்கே அரைக்கல் தொலைவு.

தேவர்கள் சபை கூடின இடம்-தேவனார் தொகை.

## 37 திருமணிக்கூடம்

மணிக்கூட நாயகன்-திருமாமகள் நாச்சியார்.

குன்றமும் வானும் மண்ணும்
குளிர்புனல் திங்க ளோடு,
நின்றவெஞ் சுடரும் அல்லா
நிலைகளுமாய எந்தை,
மன்றமும் வயலும் காவும்,
மாடமும் மணங்கொண்டு, எங்கும்
தென்றல் வந் துலவும் நாங்கூர்த்
திருமணிக் கூடத்தானே.

—பெரிய திருமொழி.

(புனல்-நீர், திங்கள்-சந்திரன்.)

திருநாங்கூருக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவிலும், காவளம் பாடிக்குத் தெற்கே மூன்றுகல் தொலைவிலும் இருக்கின்றது.

## 38 காவளம்பாடி

கோபாலகிருட்டிணன் - மடவரல் மங்கை செங்கமல நாச்சியார்.

படவர வுச்சி தன்மேல்
பாய்ந்துபல் நடங்கள் செய்து,
மடவரல் மங்கை தன்னை
மார்வகத்(து) இருத்தினானே!
தடவரை தங்கு மாடத்
தகுபுகழ் நாங்கை மேய,
கடவுளே! காவளந் தண்
பாடியாய்! களைகண் நீயே!

—பெரிய திருமொழி.

மடவரல்-இளம்பெண். திருநகரியிலிருந்து தெற்கே திருவெண்காடு செல்லும் சாலையில் ஒன்றரைக் கல் தொலைவில் இருக்கின்றது.

## 39 திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்)

கண்ணன், நாராயணன்-பூவார் திருமகள் நாச்சியார்.

பூவார் திருமா மகள்புல் லியாமார்பா,
நாவார் புகழ்வே தியர்மன் னியநாங்கூர்த்
தேவா! திருவெள்ளக் குளத்துறை வானே,
‘ஆவா! அடியானிவன்,’ என் றருளாயே.

—பெரிய திருமொழி.

திருத்தேவனார்தொகை என்னும் தலத்திற்கு மேற்கே அரைக்கல் தொலைவு.

ஸ்ரீ ரங்கநாதர் சன்னதி



## 40 பார்த்தன்பள்ளி

தாமரையாள் கேள்வன்-தாமரை நாயகி

கவள யானைக் கொம் பொசித்த
கண்ணனென்றும், காமரு சீர்க்
குவளைமேகம் அன்ன மேனி
கொண்டகோன் என் ஆனைஎன்றும்
தவளமாட நீடு நாங்கைத்
தாமரை யாள் கேள்வன் என்றும்,
பவள வாயாள் என்ம டந்தை
பார்த்தன் பள்ளி பாடுவாளே

—பெரிய திருமொழி.

திருமாலிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு, நற்றாய் இரங்கிக் கூறுதல்.

(பார்த்தன்-அர்ச்சுனன்; கவளம்-யானைஉணவு ஒசித்தல்-ஒடித்தல்; தவளம்- வெண்ணிறம்.)

சீர்காழியினின்றும் ஏழுகல் தொலைவு. திருநாங்கூரிலிருந்து இரண்டு கல் தொலைவு.

30ஆவது எண்ணிலிருந்து 40 எண் முடிய 11 தலங்களும் திருநாங்கூரைச் சேர்ந்த தலங்கள் என்று சொல்லப் பெறுகின்றன. இத்தலங்களின் பதினொரு பெருமாளும் திருநகரிப் பெருமாளும் சேர்ந்து தை அமாவாசையில் 12 கருட வாகனங்களில் வரும் காட்சியை ஒரே சமயத்தில் திருநாங்கூரில் காணலாம்.

(சோழநாட்டுத் திருத்தலங்கள் நிறைவு.)

# அப்பரடிகளின் அருள்மொழி



**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

தமிழகம், வளர்ந்த நாகரிக மரபுகளைக் கொண்டு புகழ் பூத்ததாகும். மொழியியல், வாழ்வியல், கலையியல், சமயவியல் அனைத்திலும் தமிழகம் தனக்கென்று ஒரு மரபும் தனி நடையும் கொண்டு விளங்கிய பெருமையுடையது. காலந்தோறும் தமிழ்மொழியையும் தமிழ் நெறி மரபுகளையும் வளர்த்துப் பாதுகாத்த வரலாற்றுப் பெருமை தமிழினத்திற்கு உண்டு.

ஆயினும் கி.பி.2ம் நூற்றாண்டுக்குப் பின் தமிழ் மொழி வரலாறு, தமிழின ஒருமைப்பாடு சமயநெறி ஆகியவற்றைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் ஒரு தொய்வு ஏற்பட்டது உண்மை. செந்தமிழ் வழக்கில் அயல் வழக்கு புல்லுருவி வடிவத்தில் ஊடுருவியமையால் தமிழ் மக்கள் ஏமாந்தனர். ஏமாற்ற வந்தவர்கள் ஏற்றங்கொண்டனர். தமிழ் மொழியில் அயல் மொழிச் சொற்களின் ஊடுருவல், திருத்தலங்களுக்கிருந்த தமிழ்ப் பெயர்களில்மாற்றம், திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் இறைவியின் தமிழ்ப் பெயர்கள் மாற்றம், வரலாற்று அடிப்படையில் புகழ்பெற்ற திருத்தலங்களுக்குப் பொருந்தாப் புராணங்கள் செய்து, புகழ் மங்கச் செய்தல், கொள்கை-கோட்பாடுகளில் கலப்படம் எல்லாம் செய்யப்பட்டன. தன்னையும், கடவுளையுமே நம்பும் தமிழர்கள் சிறு தெய்வங்களை நம்பத் தலைப்பட்டனர்.; நாளையும் கோளையும் கூட நம்பி வழிபடத் தலைப்பட்டுவிட்டனர். தமிழர்களின் அறிவு கெட்டது; ஆள்வினைத்திறன் சுருங்கிற்று. வாழப் பிறந்தவர்கள் பிழைப்பு நடத்தத் தலைப்பட்டனர்.

இந்தப் படுவீழ்ச்சியிலிருந்து தமிழகத்தை மீட்க ஏழாம் நூற்றாண்டில் ஒரு பேரொளி எழுந்தது; நாடு முழுவதும் ஒளி வீசியது; கண் மூடித்தனமான மூடப்பழக்கங்களைச் சுட்டெரித்தது; ஞானத்தைப் பரப்பியது. தமிழர்கள் எழுச்சி பெற்றனர். ஏற்றம் பெற்றனர். அந்தப் பேரொளி எது?

அந்தப் பேரொளிதான் ஞாலமெல்லாம் 'அப்பரடிகள்' என்று புகழ்ந்து போற்றும் தமிழ் தலைவர். அப்பரடிகள் அயல் வழக்கின் காரணமாக வந்து மண்டிக் கிடந்த தீமைகளைச் சாடினார்; மக்களுக்கு அறிவு விளக்கம் தந்தார்.

## முடியாட்சியை எதிர்த்த முதல்வர்

உலகம் முழுவதும் ''அரசனின் ஆணை ஆண்டவனின் ஆணை'' என்ற கொள்கை இருந்தபொழுது தமிழ்நாட்டில் மக்களின் அடிப்படைச் சுதந்திரத்திற்கு முரணாக இருந்த முடியாட்சியை, எதிர்த்துப் புரட்சி செய்த முதல் தலைவர் அப்பரடிகள்.

''நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யல்லோம்
ஏமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்க வெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடி இணையே குறுகி
னோமே''.

6ம் திருமுறை.

என்று முடியாட்சியை எதிர்த்துப் புரட்சி செய்த தலைவர் அப்பரடிகள். அப்பரடிகள் வாழ்ந்த காலம் ஏழாம் நூற்றாண்டு.

ஆனால், அன்று (7ம் நூற்றாண்டில்) அப்பரடிகள் எண்ணிச் சொன்னவைகள், இன்று சீர்த்திருத்தக் கருத்துக்களாகப் போற்றப்படுகின்றன. தமிழுலகில் முதன் முதலில் சமுதாயச் சீர்த்திருத்தத்தைச் சிந்தித்துக் கூறிய முதல் புரட்சித் தலைவர், ஞானத் தலைவர் அப்பரடிகள்.

**சித்திரை சதயம் அப்பர் முக்தி அடைந்த திருநாள் ஆகும். அருளாளர் அப்பர் அருந்தொண்டை நினைவு கூர்வது இக்கட்டுரையாகும்.**

## சமுதாயச் சீர்திருத்தம்

தமிழ் மரபில் குலம் மட்டும் உண்டு. குலம் என்பது வழி வழி தலைமுறை சார்ந்த நெறி மரபினைச் சார்ந்தது. இதனை,

''இலமென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள''

திருக்குறள் 223

என்ற திருக்குறளாலும் அறிக. பிறப்பினால் அமையும் சாதிக் கொடுமைகள் தமிழகத்தில் இருந்ததில்லை. அயல் வழக்கின் நுழைவாலும் நிலபிரபுத்துவ சமுதாய அமைப்பின் காரணமாகவும் பிறப்பினால் சாதி வேற்றுமை, தீண்டாமை முதலியன வந்து புகுந்தன. இந்த சாதி வேற்றுமைகளை அப்பரடிகள் வன்மையாக மறுக்கின்றார்; கண்டிக்கின்றார்.

''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே''

என்று சாடுகிறார் மேலும்.

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே!''

என்றும் அப்பரடிகள் பாடுகின்றார்.

இந்தப் பாடலின் கோட்பாடுகளை இப்போதும் ஏற்காத இதயம் படைத்த மருட்டுகின்ற மதத் தலைவர்கள் நமது நாட்டில் உள்ளனர். ஐயகோ! இன்றைய தமிழ் தமிழகம் யாரோ ஒரு பாவி நுழைத்த சாதிப் புன்மைகளால் சீரழிந்து வருகிறது. இந்தப் பொல்லாச் சாதித் தீமையை நீக்கினால் ஒழியத் தமிழகம் மீளாது. தமிழினமே ஒருமைப்பாடு குலைந்து சிதறுண்டு போகும். திருக்கோயில் வழிபாட்டு முறையிலும் கருவறையில்உள்ள பெருமானைப் பத்தராவார் அனைவரும் பூவும் புனலும் சொரிந்து வழிபடும் வாய்ப்பு, வழங்கப் பெறுதல் வேண்டும். இந்த உரிமை திருமுறைக் காலத்திலும் அதற்கு முன்பும் இருந்தது.

மேலும் அப்பரடிகள்

''மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா வரர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்.
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்''

4ஆம் திருமுறை.

என்று ஓதும் பாடலின் மூலம் பத்தராவார் ஒவ்வொருவரும் கருவறையில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குப் புனலும், பூவும் சொரிந்து வழிபட்டுள்ளனர் என்பதை அறிகின்றோம். இன்றும் வடபுலத்தில் இந்த மரபு இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் இந்த உரிமை இல்லை. அர்ச்சகர் சாதியை மாற்றும் முயற்சியை விட இந்த முயற்சி பலனளிக்கத்தக்கது. பழைய மரபைப் புதுப்பிப்பதுமாகும். மூலவர் இறைவன் சந்நிதியில் (திருவாபரணங்கள் இல்லாத நிலையில்) நடைமுறைப்படுத்தலாம்.

## அறக்கட்டளை முறை

இன்று நம்மை வருத்தும் தீமைகளில் இரண்டாவது வறுமை. ஏழ்மையாகும். இந்த வறுமையிலிருந்து மக்களை மீட்கத் தவறிவிட்டால் இந்தத் தலைமுறையிலேயே தமிழர்கள் வலிமை இழப்பர்; தமிழகம் தாழும். பொருளியல் துறையில் அறக்கட்டளை முறையை தர்மகர்த்தா முறையை வலியுறுத்துவர்.

இந்தத் தர்மகர்த்தா முறையை அண்ணல் காந்தியடிகள் இன்று இந்தியாவிற்கு அறிமுகப் படுத்தினார். ஆனால் இந்தத் தர்மகர்த்தா முறைக் கொள்கையை ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரடிகள் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

''இரப்பவர்க் கீய வைத்தார்
ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே''

4 ஆம் திருமுறை

இது அற்புதமான தத்துவம். இரப்பவரின் துன்பம் நீக்கவே செல்வம் உடைமை. அச் செல்வம் உடைமையும் நாமாகப் பெற்றதல்ல. இறைவன் திருவருளால் அமைந்தது. அதுவும் இரப்பவர்க்கு ஈதல் செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன் அமைக்கப்பெற்றது. இது நியதி. இங்ஙனம் அல்லாத உடைமை அமைப்புகள் ஏற்கத்தக்கன அல்ல. அவை பிறர் பங்கைத் திருடிச் சேர்த்தவை. இவர்கள் பொருள் ஈட்டும் பொழுதும் பேணும்பொழுதும் கரந்து வாழ்பவர்கள். ஆதலால் இவர்களுக்கு நரகம் உறுதி என்கிறார் அப்பரடிகள்.

## பழகும் பண்பியல் கோட்பாடு

மனிதகுலம் கூடிவாழும் இயல்பினது. கூடி வாழ்வதே ஒழுக்கம். கூடி வாழ்தலுக்குச் சில பண்பியல்கள் தேவை. இதனைப் ''பழகும் பண்பியல்'' என்று கூறலாம். இத்துறையை மேலைநாட்டினர் ''Behaviarial Science'' என்று வளர்த்துள்ளனர்.

பழகும் பண்பியலில் தலையாயது எது எனில் யாரோடும் அன்பாகப் பழகுவது. அந்நிய மாவதற்குரிய செய்திகளைப் பின்தள்ளி வைத்து, ஒன்றுபடுத்தலுக்குரிய களங்களை உரமூட்டி வளர்த்தல், ஒருவர் இல்லாத இடத்தில் அவருடைய புகழ்மிக்க குணங்களைப் பலர் அறியக் கூறவேண்டும். அவரைநேரில் காணும் போது அவரிடம் முகமன் பேசாமல் -புகழ்ந்து கூறாமல் இடித்தும் எடுத்தும் கூறவனவற்றைக் கூறித் திருத்த முற்படுதல் வேண்டும்.

''குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடை யாரெலாம்'

எனறும் பழகும் பண்பியலுக்கு இலக்கணம் கூறுகின்றார் அப்பரடிகள்.

### உழவாரத் திருத்தொண்டு

தமிழகத் திருக்கோயில்கள் சமுதாயத்தின் மையங்கள் ஆதலால் திருக்கோயில்களைப் பேணுவதில் அப்பரடிகள் ஆர்வம் மிகுதியும் காட்டினார். திருக்கோயில்களைப் பேணும் ஆர்வத்தினாலேயே உழவாரத்தினைக் கையிலேந்தித் திருத்தொண்டு செய்தார். சேக்கிழார் ''கைத்திருத்தொண்டு'' என்று இதனைப் பாராட்டினார். அப்பரடிகள்

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே''.

என்று திருக்கோயில் பணி செய்யக் கூவி அழைக்கிறார். அப்பரடிகள் வாழ்ந்த காலத்தில் இந்தப் பணிகள் எந்த அளவுக்கு அவசியமாக இருந்தது என்பது தெரியவில்லை. ஆனால் இன்று இந்தப் பணிகளை அவாவி நிற்கும் திருக்கோயில்கள் எண்ணற்றவை. நமது திருக்கோயில்களை நாம் பேணிக் காக்கவேண்டும். அது நமது கடமை.

### எல்லை கடந்த அருளாளர்

அப்பரடிகள் வேறுபாடுகளைக் கடந்த நெஞ்சினர். உலகம் தழீஇய உணர்வினர். நாடு, மொழி, சமய எல்லைகள் கடந்த அருளாளர். ஒரோவழி சமணர்கள், பௌத்தர்களைக் கடிந்த பகுதிகள் சில உண்டு. இவை மதத்தின் பெயரால் தவறு செய்தவர்களைக் கண்டிக்கும் நோக்கத்திலேயன்றி வேறு அல்ல. இதேபோல் வேறுபாடுகளையும் தனித் தன்மைகளையும் அங்கீகரிக்கும் பேருள்ளம் அப்பரடிகளுடையது.

''வடமொழியும் தென்தமிழும் ஆனான்கண்டாய்''
''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்''

என்ற அடிகள் கவனித்துப் படித்து இன்புறத் தக்கன. இறைவனை ''எல்லா உலகமும் ஆனாய்''! என்ற பாடல் உலக ஒருமைப்பாட்டினை வற்புறுத்தும் பாடல்

இன்றைய தமிழகத்திற்கு அப்பரடிகளே சிறந்த வழிகாட்டி. அப்பரடிகள் காட்டிய அருள் நெறியே நமது நெறி.

உலகப் பொது நெறி. வளர்க அருள்நெறி.

**நன்றி : கலைவாணி பதிப்பக வெளியீடான ' அப்பர் விருந்து ''**




பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் எழில்மிகு வண்ணக்கோலத்தை பிப்ரவரி 91 இதழில் கண்டு பக்தி பரவசமானேன். மார்ச் இதழில் அருள்மிகு பார்த்தசாரதி அருட்கோலம் கண்டு மகிழ்ந்தேன். நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாக, வளர்ந்துவரும் ''திருக்கோயில்'' இதழே நீ வாழி வாழி! வையப் புகழ் பெற்று வாழி!

—இரா. கணேசன், குமாரபாளையம்,
சேலம் மாவட்டம்.

நடராசன் அடிமை அவர்களால் எழுதப் பெற்ற ''பரமநாடகம் பற்றிய பல்லோர் பரவசம்'' கட்டுரை உண்மையில் திருக்கோயில் இதழ் வாசகன் ஆகிய என்னைப் பரவசப்படுத்தியது.

—தி. நடராசன், தில்லைகங்காநகர்
நங்கநல்லூர்.

தங்கள் கைவண்ணத்தில் ''கம்பரின் இராமாவதாரம்'' தேவாமிர்தமாய்த் தித்திக்கிறது. பண்பில்மிகு பரதனும், இராமர் அன்பில் மிகு குகனும் எங்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்று நிலைத்து விளங்குகிறார்கள்.

—வி. கமலவேணி, வி. நீலவேணி,
பெங்களூர்.



# ஆடல் காணீரோ திருவிளையாடல்



கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன்

## (7)

மதுரையை சிவபெருமான் மீனாட்சியம்மையுடன் ஆண்டு வரும் காலத்தில் மகிரிஷிகளெல்லாம் இறைவனைத் தரிசித்துக் களிப்படைந்துவந்தனர். அவர்களில்கௌதமமுனிவரை மீனாட்சியம்மையின் அன்னையான காஞ்சனமாலை சந்தித்து நன்மையளிக்கக்கூடிய நல்ல விரதமேதேனும் இருப்பின் கூறுமாறு கேட்டனள். ''அம்மையே! நீ செய்த புண்ணியத்தால் உலகமாதாவான தடாதகைப் பிராட்டியை மகளாக அடைந்தாய்! சிவபெருமானையே மருமகனாக அடைந்தாய். மலையத்துவசனின் மகாராணியாகிய உனக்கு என்ன கூறப்போகிறேன். ஆயினும் கூறுகிறேன் கேள்.''

''தவவலியால் உலகீன்ற தடாதகைக்குத் தாயானாய்!
சிவபெருமான் மருமகனெனும் சீர்பெற்றாய்! திறன்மலயத்
துவசன் அருங்கற்புடையாய் நீ அறியாத் தொல்விரதம்
அவனியிடத்தெவர் அறிவார் ஆனாலும் இயம்பக்கேள்''

''தவங்கள், வாசிகம், மானசம், காயிகம் என மூவகைப்படும். ஐந்தெழுத்தை செபித்தல், உபநிடதம், உருத்திர மந்திரங்களைப் பாராயணம் செய்தல் வாசிகம், மனதால் இறைவனைத் தியானித்தல், ஐம்புலன்களையடக்கல் பொறுமை, பிற உயிர்களிடம் அன்பு காட்டுதல் முதலானவை மானசம் ஆகும். யாத்திரை மேற்கொண்டு பல இடங்களில் சென்று இறைவனைப் பணிதல், புண்ணிய நதிகளில் நீராடல் முதலானவை காயிகம் எனப்படும். புனித நதிகளில் நீராடுவது மிகமிக மேன்மையானது எல்லா நதிகளும் கடலில் கலப்பதால் கடலில் நீராடுவது மிக மிக மேன்மையானது'' எனக் கூறிச் சென்றார்.


இவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்ட காஞ்சனமாலை தனது மகளான மீனாட்சியிடம் கூற, சிறிது யோசித்துத் தனது நாயகரான சிவபெருமானிடம் சென்று ''என் அன்னை கடலில் நீராட வேண்டுமென்பதைத் தன் நாயகனிடம் கூறும்போது! ''குண்டோதரனுக்காக ஆற்றையும் (வையையையும்) அன்னக் குழியும் அழைத்த அருட்கடலே!'' என அழைத்து கூறினாள். ஆற்றை அழைக்கும் கருணைக் கடல் தன் அன்னைக்காகக் கடலை அழைக்க மாட்டாரா என்பது ஏக்கத்தின் குறிப்பு.

''தன்தன்னை உடைய பெருந்தகை வேந்தர் பெருமான் முன்
சென்று அன்னமென நின்று செப்புவாள் குறள் வீரற்கு
அன்று அன்னக் குழியினோடும் ஆறு அழைத்த அருட்கடலே''
இன்று அன்னை கடலாடவேண்டினாள் என்று இரந்தாள்''

மீனாட்சியம்மையின் வார்த்தையைக் கேட்ட இறைவர் ''ஒரு கடல் வேண்டுமா? ஏழும் வரச் சொல்லுகிறேன்'' என்றுகூற, அவரது கட்டளையின் பிரசாரம் ஒரு குளத்தில் ஏழு கடல்களும் ஏழு வண்ணங்களுடன் வந்தன.

''தேவி திருமொழிகேட்டுத் தென்னவராய் நிலம்புரக்கும்
காவி திகழ் மணிகண்டர் கடல்ஒன்றோ? ஏழு கடலும்
கூவி வரவழைத்தும்'' என உன்னினார் குண பாலோர்
வாவி யிடை ஏழுவேறு வண்ணமொடும் வருவனவால்''

மதுரை நடுங்கும்படி, கலியுக முடிவில் உலகத்தை அழிக்க வரும் கடல்கள், சிவபெருமானது திருவடியடைந்தார் அடங்கிய மாதிரி அடங்கின. சிவபெருமான் மீனாட்சி அம்மையிடம் ''உன் அன்னையின் பொருட்டு ஏழு கடல்களையும் அழைத்துள்ளோம். உன் அன்னையை அழைத்துவா'' என்றனர். காஞ்சனமாலை பெரியோர்களை அழைத்து கடல் நீராடுவதற்கான விதி என்ன எனக் கேட்க'' கணவனது கையையோ, கணவனில்லாதவர் பெற்ற மகனின் கையையோ, இரண்டுமில்லாதவர் கன்றின் வாலைப் பற்றிக்கொண்டோ நீராட வேண்டும்'' என்றனர்.



''கோதறு கற்பினாய்! கொழுநன் கைத்தலம்:
காதலன் கைத்தலம்; அன்றிக் கன்றின் வால்
ஆதலிம் மூன்றிலொன்று அங்கை பற்றியே
ஓத நீராடுதல் மரபு என்றோதினார்''.

இதுகேட்டு வருத்தமடைந்த காஞ்சனா தேவி ''நான் போன பிறவியில் பெரும் பாவம் செய்தவள்! எனக்குக் கணவரும் இல்லை. மக னும் இல்லை. கன்றுதான் கிடைக்கும்போலும்''

''மறையவர் வாய்மை பொன்மாலை கேட்டு
மேல்
குறைவறத் தவஞ்செயா கொடிய பாவியேற்கு
இறைவனும் சிறுவனும் இல்லையே இனிப்
பெறுவது கன்றலாற் பிறிதுண்டாகுமோ''.

ஆதலின் கன்றின் வாலைப் பிடித்துக் கொண்டுதான் நான் நீராட வேண்டுமோ? எனக் கேட்டாள். என்ன கேட்டாலும் கொடுக்கக் கூடியவன் சிவபெருமான். பிரமபதவியோ, திரு மால் பதவியோ, எது வேண்டுமானாலும் தரு வேன் என்பர் அப்பெருமான். அப்பெருமானின் துணைவியை மகளாகப் பெற்ற காஞ்சனைக்கு என்ன குறைவு என்பது குறிப்பு.

''ஆதலால் கன்றின் வால் பற்றி யாடுகோ?
மாதராய்! என்றுதன் மகட்குப் கூறலும்
வேதன்மால் பதவியும் வேண்டினார்க் கருள்
நாதன் ஆருயிர்த்துணை யாய நாயகி.''

தனது அன்னையின் மனக் குறையைக் கேட்டு மீனாட்சியம்மை தன் நாயகரான சிவ பெருமானிடம் கூறினாள். அவர் தேவலோகத் தில் தேவராசனுடன் அமர்ந்திருந்த பாண்டிய ராசனை மனத்தில் என்ன மலையத்துவச பாண்டிய மகாராசா தோன்றினான். தனது மருமகனான சிவபெருமானைக் கண்டான்.

கம்பனது இராமாயணத்தில் குகப் படலத் தில் பரதனும் குகனும் சந்தித்தனர் என்று ஒரு பாடல். யார் யாரை வணங்கினார் எனத்தெரி யாத வண்ணம் அப்பாடல் காணப்படுகின்றது. ''அவனும் அவனடி வீழ்ந்தான்'' என்று கூறு கிறான் கம்பன். குகன் பரதனை முதலில் வணங்கினான் என்றால் அது செய்ய முடியாது. ஏனெனில் இராமபிரான் குகனிடம்'' அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'' என்று கூறியதுடன் ''உன் தம்பி பரதன் அயோத்தியை அரசாட்சி செய்கின்றான்'' (அங்குள கிளைக்

காவற்கு அண்மதியின் உளன் உம்பி) என்று பரதன் உனக்குத் தம்பி'' எனக் கூறினார். ஆதலால் பரதனைத் தனது தம்பி என உறவு கொண்ட குகன் பரதனை முதன் முதலாக வணங்கியிருக்கமாட்டான். பின் பரதன் குகனை முதன் முதல் வணங்கினான் என்னலாமா? என்றால் அரச குலத்தில் பிறந்த ஒருவன் வேடுவ குலத்தில் பிறந்த ஒருவனை வணங்குவானா? எனக் கேள்வி எழுப்பலாம்.

அதுபோன்ற நிலை ஒரு பாடலில் இப்புராணத்தில் காணப்படுகின்றது. சிவபெருமான் மருமகன். மலையத் துவசன் மாமன். மாமனான மலையத்துவசன் மருமகனான சிவபெருமானை விழுந்து வணங்க வந்தபோது அவரைத்தடுத்து, மாமனான மலையத்துவசனைத் தழுவிக் கொண்டார். மகட்தந்த மாமனுக்கு மகாதேவன் தந்த மரியாதையும், மகனை மணந்த மருமகனென்றபோதும் தெய்வநிலையை மறவாது சிவபெருமானை வணங்க வந்த பாண்டியனின் சிவபக்தியையும் என்னவென்று கூறுவது?

''வந்தான் மருகன் சரணம் பணிவான்

முந்தா முனமாமனெனும் முறையால்

அந்தாமரை அங்கையமைத்து மகட்

தந்தானை யெதிர்த்து தழீஇயனனால்''

பின்னர், சிவபெருமான் ''தங்களது மனைவியுடன் ஏழு கடலில் இறங்கி நீராடுக'' எனக் கூற தனது மகளான மீனாட்சியை பாண்டியன் நோக்கி, ''உன்னை உன் கணவருடன் உன் திருமணத்தன்று காணவில்லையே என வருந்திய எனக்கு இன்று காணும் பேறு கிட்டியது'' எனக் கூறி மகிழ்ந்தார். அப்போது, சர்வ அலங்காரங்கொண்டவளாக; திலகமணிந்து திருமங்கலியமணிந்தவளாகக் தேவி காஞ்சனமாலை தோன்றி பாண்டியராசனைப் பணிந்தாள். பின்னர் பாண்டியனும் பாண்டியமாதேவியும் கைகோர்த்துக்கொண்டு பஞ்சாட்சர மந்திரம் கூறி ஏழு கடலில் முழுகினர். முழுகியெழுந்த இருவரும் தெய்வீக உருவங்கொண்டு விளங்கினர். ஆகாயத்தினின்று ஒரு விமானம் வர அதன் மீது இருவரும் ஏறினர். ''உலகமீன்ற அன்னை நமக்கு மகளாகவும், அப்பன் நமக்கு மருமகனாகவும் கிடைக்க நாம் என்ன புண்ணியம் செய்தோம்'' என இருவரும் மகிழ்ந்தனர். விமானம் எல்லா உலகங்களையும் கடந்து சிவலோகம் அடைந்தது என்கிறது வரலாறு.

''புவலோகம் கடந்துபோய் புண்ணியருக்கு

எண்ணிறந்த போக மூட்டும்

சுவலோகம் கடந்துபோய் மகலோகம்

சன லாகம் துறந்து மலைத்

தவலோகம் கடந்துபோய் சத்தியலோகம்

கடந்து தண்டுழாயோன்

நவலோகம் கடந்து நாயகமாம் சிவலோகம்

நண்ணினாரே''

தன் தாய் தந்தையருக்கு நற்கதிதந்த இறைவனைப் பணிந்து அம்மை மீனாட்சி அக மகிழ்ந்தாள். ''தேவருலகப் பசுவான காமதேனுவின் கன்றிற்குகுறைவேது? என்பொருட்டு என் அன்னைக்காக ஏழுகடலையும் அழைத்து, மாண்டுபோன கணவனையும் மீள அழைத்து நற்கதியளித்தீர்கள் தங்களது கருணைக்கு என்ன கூறுவேன்'' என்றாள்.

மாண்டவன் மீளவும், மங்கலமிழந்த பெண் மீண்டும் மங்கலமும்வாழ்வும் பெற்றாள். ''முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ?'' என்ற ஆன்றோர் உரையின்படி சிவனருள் பெற்றார்க்கு என்னதான் கிடைக்காது. வேண்டுவன வேண்டியபோது அளிக்கும் வேதமூர்த்தியான இறைவன் நமக்கு எல்லா நன்மைகளையும் அளிக்க வேண்டுவோமாக.

(தொடரும்)

## வான்புகழ் வள்ளுவர்

வள்ளுவர் காட்டும் இயலே நம்நெறி
வளம்சேர் மாந்தர் இசையு நன்னெறி
மனமும் இனமும் மகிழும் மனுநெறி
மாண்பு கூட்டும் குறளைப் பயில்வோம்

பண்ணின் இசையாய் பாரினில் வாழ்வோம்
பண்புறு செயலாய் நாளும் திகழ்வோம்
வாழும் நெறியாய் குறளில் இணைவோம்
வாழ்த்தும் அறிஞர் நெஞ்சம் நிறைவோம்

மனிதப் பிறவியே பெரும்பேறாகும்
மனிதப் பண்பே போற்றி வளர்ப்போம்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்
மண்ணகம் விண்ணகம் ஆக்கி மகிழ்வோம்

வள்ளுவர் வழியே வையக வழியாம்
வகையாய் வளங்கள் கூட்டும் வழியாம்
வான்புகழ் வள்ளுவர் வழியே நடப்போம்
வானோர் வாழ்த்தும் தகைமை பெறுவோம்!

—கவிஞர் சீனி திருநாவுக்கரசு


சித்திரபாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம்: MN ராஜு
தூயவனான பிரதிகாமி துரோபதை இருக்குமிடம் செல்லாமலே சிறிது நேரம் வீணே போக்கி அரண்மனைக்குத் திரும்ப வருகிறான்
வேந்தே! துரோபதை வர மறுக்கிறார் தருமர் முதலில் தம்மைத் தோற்று, என்னைத் தோற்றாரா? அல்லது என்னைத் தோற்று பிறகு தம்மைத் தோற்றாரா? என்று அவர் வினவுகிறார்
துச்சாதனா! நீ போய் அவளை இங்கே அழைத்து வா
சூதில் உன் கணவன் தம்பிகளை-யும் தன்னையும் தோற்று உன்னையும் எங்களுக்கே தோற்றானடி!.. அடிமையே வா
துரோபதையின் கையைப் பிடித்துத் துச்சாதனன் இழுக்க, மிரண்டு ஓடுகிறாள் துரோபதை
பாருங்கள் அம்மா உங்கள் மகன் அடாத செய்கையை
காந்தாரியும் துச்சாதனனைக் கண்டிக்கவில்லை
"அழைப்பது உன் உறவினர்கள் தானே, அஞ்சாமல போ, அரண்மனைக்கு!
துரோபதையின் கூந்தலைப் பற்றித் துச்சாதனன் இழுதது வரக் காணும் மக்கள் எல்லாம் கலங்கித் துடிக்கிறார்கள்
ஆ! ஐயோ, இதென்ன கொடுமை?
துச்சாதனன் கொடுஞ்செயலைக் கண்டு வீமனும் அர்ச்சுனனும் துடித்து ஆயுதங்களை எடுக்க, தருமர் அவர்களைச் சாந்தப்படுத்துகிறார்
பொறுங்கள் பார்ப்போம்.


கங்காதேவி புத்திரரே! நீதி விதுரரே! மாமா! தருமர் தம்மைத் தோற்ற பிறகு, அவர் என்னை எப்படித் தோற்க முடியும்? நீதி கூறுங்கள்.
அனைவரும் மௌனமாக இருக்க, விகர்ணன் எழுந்து பேசுகிறான்
திரௌபதியைத் தருமர் பந்தயம் வைத்தது சுயபுத்தியினால் அன்று. சகுனியின் தூண்டுதலே இக்கொடுமைக்குக் காரணம்
"தம்மைத் தோற்ற பிறகு துரோபதையை வைத்துச் சூதாட தருமருக்கு உரிமை இல்லை" விகர்ணன் நீதிகூற ஆன்றோர்கள் அதை ஆமோதிக்கிறார்கள்.
ஆமாம் ஆமாம்!
ஆனால் கர்ணனோ சினந்து அதை மறுக்கிறான்
தருமர் தம சொத்தை எல்லாம் சூதாடித் தோற்றுவிட்டார் துரோபதையும் அவருடைய சொத்துதானே ஆகவே அவள் அடிமை தான்.
துச்சாதனா! இந்த அடிமையின் துகிலை உரிந்து நீ அவளை அவமானப் படுத்து
துச்சாதனன் வலய இழுக்க துரோபதை "கோவிந்தா, கோவிந்தா" என்று கூறிக் கதறுகிறாள்
துரோபதையின் கதறலைக் கேட்டு துவாரகையில் இருந்தவாறே அருள் புரிகிறார் கண்ண பெருமான்.
துரோபதை தரித்திருக்கும் ஆடை ஆயிரங்கோடி ஆடைகளாக வளர்கிறது
"யாரே துரோபதைக்குப் பூவுலகில் ஒப்பு இவளை ஒப்பார ஒருவர் உண்டென எண்ணுதலும் பாவமே" என்று வீடுமர், விதுரா
யாவரும் கற்பானுக்குத் தெய்வமான துரோபதையைக் கைகுவித்து வணங்க, தேவரும் கற்பக மலர் சொரிகிறார்கள்

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்லவி

''காலைத் தூக்கி நின்றாடும்தெய்வமே-எனைக்
கைதூக்கி யாள் தெய்வமே'' (காலை)

அனுபல்லவி

வேலைத் தூக்கும் பிள்ளை
தனைப்பெற்ற தெய்வமே
மின்னும் புகழ்சேர் தில்லைப்
பொன்னம்பலத்திலொரு (காலை)

செங்கையில்மான் தூக்கிச்
சிவந்த மழுவும் தூக்கி,
அங்கத்திலொரு பெண்ணை
அனுதினமும் தூக்கிக்
கங்கையைத் திங்களைக்
கதித்த சடையில் தூக்கி
இங்கும் அங்குமாய்த் தேடி
இருவர் கண்டறியாத (காலை)

நந்தி மத்தளம் தூக்க
நாரதர் யாழ் தூக்க
தொந்தமென்றயன் தாளம்
சதியொடு தூக்கச்
சிந்தை மகிழ்ந்து வானோர்
சென்னிமேற் கரந் தூக்க
முந்தும் வலியுடைய
முயலகன் உனைத் தூக்க (காலை)

மாரிமுத்தாப்பிள்ளை பல இலக்கிய நூல்களைச் செய்திருப்பினும், அவருடைய புகழ் இன்றும் நிலைத்து நிலைபெற்றிருப்பதற்கு அவர் பாடிய கீர்த்தனங்களே காரணமாக விளங்குகின்றன என்பன குறிப்பிடத்தக்கது, இவர் கி.பி. 1712-இல் தோன்றி 75 ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 1787-இல் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் வாழ்ந்த காலத்திலேயே சமகாலத்தவராக வாழ்ந்து தமிழிசைக்குத் தலைசிறந்த தொண்டாற்றியவர் சீர்காழி அருணாசலக்கவிராயர். தருமபுர ஆதீன வித்துவான்களிடம் தமிழ்க்கல்வியும், சமயக் கல்வியும் கற்றவர். தமிழ் நாடெங்கும் போற்றப்படும் இராம நாடக கீர்த்தனைகளைப் பாடியவர். சிறந்த சைவரானபோதும் 40 இராகங்களில் கம்பரின் இராமாயணத்தைப் பின்பற்றி முழுதும் இசைப் பாடல்களாகவே இராமநாடக கீர்த்தனைகளை இவர் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

''இராமசாமி தூதன் நானடா
அடா இராவணா-நானடா
என்பேர் அனுமானடா''

என்று இந்நாடகத்தில் வரும் இராவணனை இகழும் பாடலும்

''ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜயமங்களம்-நல்ல
திவ்வியமுகச் சந்திரனுக்குச் சுபமங்களம்''

எனவரும் சுபமங்களப் பாடலும் என்றும் மக்கள் மனதில் நின்று நலவும் பாடல்களாகும்.

இராமநாடக கீர்த்தனை பாடிய அருணாசலக் கவிராயர் கம்பர் இராமாயணத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ததுபோல தாமும் செய்ய விரும்பினார். ஆனால் திருவரங்க வைணவ அடியார்கள் அதற்கு முதலில் சம்மதம் தரவில்லை. அப்போது ஒரு அற்புத கீர்த்தனம் பாடி ஸ்ரீரங்க நாதரிடத்தில் முறையிட்டிருக்கிறார் அருணாசல கவிராயர்,

''ஏன் பள்ளி கொண்டீரையா-சீரங்க நாதரே
ஏனபள்ளி கொண்டீரையா

அற்புதமான அருணாசலக் கவிராயரின் இந்த அற்புதக் கீர்த்தனையைக் கேட்டு ஸ்ரீரங்க நாதர் வைணவ அடியார்கள் கனவில் எழுந்தருளி ''இராம நாடக அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று ஆணை பிறப்பித்தருள அவ்வாறே அரங்கேற்றம் செய்து கவிராயருக்குத் தக்க மரியாதைகள் செய்து வைணவ அடியார்கள் கௌரவித்ததாகக் காண்கிறோம்.

இனிய இசைக்கு மயங்காதார் யாரும் இல்லை. இறைவனையே உருக வைத்து அடியார்களைத் தேடி வரச் செய்வது இசை. இசையினால் பயிர்வளரும், வான் பொழியும், பாம்பும் மயங்கி நிற்கும்; பரமனும் பக்தர்களைத் தேடிவந்து அருள் புரிவான். அத்தகைய மகத்துவம் வாய்ந்த தமிழிசைக்கு சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றப்படும் தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் காலத்திற்கு முன்பே அரிய தொண்டு புரிந்த ஆதி மும்மூர்த்திகள் சீர்காழி முத்துத்தாண்டவரும், தில்லை விடங்கன்மாரி முத்தாப்பிள்ளையும், சீர்காழி அருணாசலக் கவிராயரும் ஆவர், தமிழிசைக்கு கர்நாடக சங்கீதத்திற்கு இம்மூவரும் ஆற்றிய அரிய சேவையை பின்னாளிலும் கோபால கிருஷ்ண பரதியார் முதலான எண்ணற்ற சான்றோர் தொடர்ந்த இசைப்பணிக்கு வழி வகுத்தது என்று சொன்னால் மிகையல்ல. சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையைப் பின்பற்றித்தான் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைக் கோபால கிருஷ்ண பாரதியார் பாடியிருக்கிறார்.

ஆகவே இத்தகைய கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சிக்கு-தமிழிசையின் மேன்மைக்கு மறையாத-மங்காத-மாபெரும் சேவையைப் புரிந்த ஆதிமும்மூர்த்திகளைப் போற்றுவது தமிழ்ச் சமுதாயத்தின் தலையாய கடமை ஆகிறது.


அக்கடமையை இன்று சிறப்புற இங்கே நிறைவேற்றிக் கொண்டிருக்கிற உங்கள் பொற்பணியைப் பாராட்டுகிறேன். இப்பணியில் என்னையும் கலந்து கொள்ள வைத்த உங்கள் அன்புள்ளத்திற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வளர்க தமிழிசை!
வாழ்க தமிழிசை போற்றிய
ஆதி மும்மூர்த்திகள்!
வாழ்க வையகம்,
நன்றி. வணக்கம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத் திருக்குட நீராட்டு விழாவை ஒட்டி ''திருமுறைகளில் விஞ்சி நிற்பது பக்திச் செறிவே, பைந்தமிழ்ச் செறிவே'' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. திருக்கோயில் இதழாசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் நடுவர் பொறுப்பினை ஏற்க, டாக்டர் சிவசங்கரன், டாக்டர் சின்னப்பா ஆகியோர் அணித்தலைமைப் பொறுப்பை ஏற்றுப் பேசினர்.



இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருக்கும் நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கின் அழகிய முன்புறத் தோற்றம்.



வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர் ஆலயத்தில் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் நிர்வாக அலுவலகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள்.